உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18

மணி - 34 சுடர் - 228 | ஹிஜ்ரி 1440 - ஷாபான் 18 | திருவள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை - 11 | சென்னை 24.04.2019 புதன் | வெளியூர் 25.04.2019 வியாழன் | http://muslimleaguetn.com/manichudar.asp | பக்கம் 4 | விலை ₹ 3

தீவிரவாதிகளின் திசை திருப்பும் முயற்சியை சமுதாயம் ஒருபோதும் ஆதரிக்காது

இலங்கை குண்டு வெடிப்பு சம்பவத்தால் முஸ்லிம்களும் விரக்தி அடைந்துள்ளனர்

இலங்கை தாக்குதல் குறித்த உளவுத்துறையின் தகவல் என்னிடம் தெரிவிக்கப் படவில்லை

அதிபர் சிறிசேன தகவல்

கொழும்பு, ஏப்ரல். 24- இலங்கையில் நிகழ்த்தப் பட்ட பயங்கரவாத தாக்குதல் குறித்து உளவுத்துறையின் தகவல் களை யாரும் என்னிடம் தெரிவிக்கவில்லை என்று சிறிசேன தெரிவித்துள்ளார். இலங்கையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை, 8 இடங்களில் தொடர் குண்டு வெடிப்பு சம்பவங்கள் நடந்தன. நேற்றுமுன்தினம் வெடி குண்டுகளை செய லிழக்கச் செய்தபோது குண்டு வெடித்தது. மேலும், கொழும்பு பஸ் நிலையத்திலும், சர்வதேச விமான நிலையம் அருகிலும் வெடிகுண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டன. அடுத்தடுத்த சம்பவங்களால் நாடு முழுவதும் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. நேற்றுமுன்தினம் நள்ளிரவு இலங்கையில் அவசர நிலை அமலுக்கு வந்தது.

இலங்கையில், பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்த திட்ட மிட்டி ருப்பதாக இந்திய உளவுத்துறை தகவல் பரிமாறியதாகவும் ஆனால், அதை பொருட்படுத்ததாதே இந்த கொடூர தாக்குதலுக்கு காரணம் என்று சொல்லப் படுகிறது. உளவுத் தகவல்களை புறக்கணித்ததற்காக மக்களிடம் இலங்கை அரசு மன்னிப்பு கோரியுள்ளது.

இந்நிலையில், தீவிரவாத தாக்குதல் குறித்து உளவுத் துறையின் தகவல் களை யாரும் என்னிடம் தெரிவிக்கவில்லை என்று இலங்கை அதிபர் சிறிசேன அதிர்ச்சிகர தகவலை வெளியிட்டுள்ளார். மேலும், தகவல் கிடைத்திருந்தால் தேவையான நடவடிக்கை எடுத்திருப்பேன் எனவும், இலங்கை பாதுகாப்புத்துறை தலைவர்கள் மாற்றப்பட்டு, பாதுகாப்பு பிரிவு முற்றிலும் சீர மைக்கப்படும் எனவும் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் போது சிறிசேனா தெரிவித்தார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய பொதுச்செயலாளர் பி.கே. குஞ்ஞாலி குட்டி, செய்யது ஹைதர் அலி ஷிஹாப் தங்ஙள் மற்றும் செய்யது சாதிக் அலி ஷிஹாப் தங்ஙள், ஆகியோர் பானக்காட்டில் தங்களது வாக்குகளை பதிவு செய்தனர்.

மக்களவைக்கு 3ஆவது கட்டமாக 117 தொகுதிகளில் தேர்தல்: 66 சதவீத வாக்குகள் பதிவு

பொன்னானி, மலப்புரம் தொகுதிகளில் 74 சதவீதத்திற்கும் அதிகமாக வாக்குப்பதிவு

புதுடெல்லி, ஏப்ரல். 24- நாடாளுமன்றத் திற்கு நேற்று (23042019) நடைபெற்ற மூன்றாவது கட்ட தேர்தலில் 66 சதவீத வாக்குகள் பதிவானது. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய பொதுச்செயலாளர் பிகே. குஞ்ஞாலி குட்டி போட்டியிடும் மலப்புரம் மற்றும் தேசிய அமைப்பு செய லாளர் இடி முஹம்மது பஷீர் போட்டி யிடும் பொன்னானி ஆகிய தொகுதிகளில் 74 சதவீதத்திற்கும் அதிகமாக வாக்குகள் பதிவாகியுள்ளன.

அ தி க ப் ப ட் ச மா க அஸ்ஸாமில் 8073 சதவீத வாக்குகள் பதிவாகின. ஒடிஸாவில் 6044 சதவீதம், மேற்குவங்கத்தில் 7967 சதவீதம், பிகாரில் 5997 சதவீதம், திரிபுராவில் 7957 சதவீதம் வாக்குகள் பதிவாகியிருந்தன.

குஜராத்தில் பிரதமர் நரேந்திரமோடி, பாஜக தேசியத் தலைவர் அமித் ஷா, மூத்த தலைவர் எல்கே. அத்வானி, மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி உள்ளிட்டோர் தங்களது வாக்குகளைப் பதிவு செய்தனர்.

மக்களவைக்கு 7 கட்டங்களாக தேர்தல் நடை பெறுகிறது.மக்களவை2ஆவது கட்டத் தேர்தலின்போது, திரிபுரா கிழக்கு மக்களவைத் தொகுதிக்கான வாக்குப்பதிவு, சட்டம்- ஒழுங்கு பிரச்னை காரணமாக ஒத்திவைக்கப் பட்டிருந்தது. இந்தத் தொகுதியுடன் சேர்த்து, குஜராத், கேரளம், அஸ்ஸாம், பிகார், சத்தீஸ்கர், மேற்குவங்கம் உள்ளிட்ட மாநிலங்களில் இருக்கும் 116 தொகுதிகள் என்று மொத்தம் 117 தொகுதிகளுக்கு 3ஆவது கட்டமாக செவ்வாய்க்கிழமை வாக்குப்பதிவு நடைபெற்றது.

3ஆவது கட்டத் தேர்தல் தொடங்கியது முதல் வாக் காளர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்களது ஜன நாயக கடமையை ஆற்றினர். இதனால் வாக்குப்பதிவு சதவீதம் தொடர்ந்து அதிகரித்துபடியே இருந்தது. குஜராத் மாநிலத்தில் பிரதமர் நரேந்திர மோடி, பாஜக தேசியத் தலைவர் அமித் ஷா, பாஜக மூத்த தலைவர் எல்கே. அத்வானி, மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி, காங்கிரஸ் மூத்த தலைவர் அகமது படேல், குஜராத் முதல்வர் விஜய் ரூபானி உள் ளிட்டோர் வாக்களித்தனர். முடிவில் குஜராத்தில் 6367 சதவீத வாக்குகள் பதிவாகி யிருந்தன.

குஜராத்தில் சில சம்பவங்களைத் தவிர்த்து, பெரும் பாலும் தேர்தல் அமைதியாகவே நடந்து முடிந்தது. அம்பேத்கர்நகரில் வாக்காளர்களை மிரட்டியதாக 2 பேர் போலீஸாரால் கைது செய்யப்பட்டனர். தகோத்தில் வாக்குச்சாவடிக்குள் புகுந்து தேர்தல் அதிகாரியை 20 பேர் கொண்ட கும்பல் அடித்து உதைத்தது. அவர்களை போலீஸார் தேடி வருகின்றனர்.

கேரளத்தில் 20 மக்களவைத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக நடைபெற்ற தேர்தலில், 7682 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்தன. கண்ணூரில் அதிகப்பட்சமாக 8208 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்தன. காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி போட்டியிடும் வயநாட்டில் 7977 சதவீத வாக்குகள் பதிவாகின. திருவனந்தபுரத்தில் 7326 சதவீதமும், பத்தனம் திட்டாவில் 7382 சதவீதமும் வாக்குகள் பதிவாகின. பத்தனம்திட்டா, வடகரா தொகுதிகளில் வாக்குச் சாவடிகளில் வரிசையில் நின்ற 2 பேர் மயங்கிவிழுந்து உயிரிழந்தனர். மேலும் ஒருவர் வாக்களித்துவிட்டு வீட்டுக்கு திரும்பிய நிலையில் இறந்தார்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் குறித்து பொய்யான செய்தியை வெளியிட்ட 21 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சத்தீஸ்கரில் 6468 சதவீதம், கோவாவில் 7323 சதவீதம், உத்தரப் பிரதேசத்தில் 6135 சதவீதம், கர்நாடகத்தில் 6756 சதவீதம், மகாராஷ்டிரத்தில் 5898 சதவீதம் வாக்குகள் பதிவாகின. உத்தரப் பிரதேச மாநிலத்தில் சில வாக்குச் சாவடிகளில் இருந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் கோளாறு ஏற்பட்டதாக புகார்கள் எழுந்தன. அவை அனைத்தையும் அதிகாரிகள் உடனடியாக சரி செய்தனர். அதேபோல், வாக்குச் சாவடியில் திரண்டிருந்த மக்களிடம் சமாஜவாதி கட்சிக்கு வாக்க ளிக்கும்படி வேண்டுகோள் விடுத்த தேர்தல் அதிகாரி பணிநீக்கம் செய்யப் பட்டார். பதாயூன் அருகே உள்ள ஓன்லா தொகுதிக் குட் பட்ட சாவடியில் வாக்களிக்க காத்திருந்த முதியவர் ஒருவர், சாவடி யிலேயே மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

அரவக்குறிச்சி தொகுதி இடைத்தேர்தல்: தி.மு.க வேட்பாளர் செந்தில் பாலாஜி வேட்பு மனு தாக்கல் செய்தார்

அரவக்குறிச்சி, ஏப்ரல். 24- அரவக்குறிச்சி தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் செந் தில் பாலாஜி இன்று காலை வேட்பு மனு தாக்கல் செய் தார்.

கரூர் மாவட்டம் அரவக் குறிச்சி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் 19-ந்தேதி நடக்கிறது. இத்தேர்தலில் போட்டியிட அதிமுக, திமுக, அமமுக, உள்ளிட்ட கட்சிகள் சார்பில் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். நாம் தமிழர் மற்றும் மக்கள் நீதி மய்யம் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் விரைவில் அறிவிக்கப்பட உள்ளனர். இதன் காரணமாக அரவக்குறிச்சி தேர்தலில் 5 முனை போட்டி நிலவுகிறது.

திமுக சார்பில் போட்டி யிடும் வேட்பாளர் முன்ன தாகவே அறிவிக்கப் பட்டு தேர்தல் பிரசாரத்தையும் தொடங்கினார். அதிமுக, அமமுக சார்பிலும் வேட் பாளர்கள் அறிவிக்கப் பட்டுள் ளதால் அவர்கள் இன்னும் 2, 3 நாட்களில் பிரசாரத்தை தொடங்க உள்ளனர். இதன் காரண மாக அரவக்குறிச்சி தேர் தல் களம் சூடு பிடித் துள்ளது.

இத்தொகுதிக்கான வேட்பு மனுதாக்கல் நேற்று முன்தினம் தொடங்கிய நிலையில், சுயேட்சை வேட்பாளர்கள் 3 பேர் வேட்பு மனு தாக்கல் செய்திருந்தனர். இந்நிலையில் இன்று காலை திமுக. சார்பில் போட்டியிடும் வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமான செந்தில் பாலாஜி, அரவக் குறிச்சி தாலுகா அலுவ லகத்தில் தேர்தல் அதிகாரி மீனாட்சியிடம் மனு தாக்கல் செய்தார்.

அவருடன் கரூர் பாராளுமன்ற தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ஜோதிமணி, முன்னாள் எம்.பி. கேசிபழனிச்சாமி மற்றும் பலர் உடன் சென்றிருந்தனர். வருகிற 29-ந்தேதி வரை வேட்பு மனுதாக்கல் செய்யலாம். மனுக்கள் மீதான பரிசீலனை வருகிற 30-ந்தேதி நடக்கிறது. மனுக்களை வாபஸ் பெற அடுத்த மாதம் 2-ந்தேதி கடைசி நாள் என தேர்தல் ஆணையம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

வேட்புமனு தாக்கலுக்கு முன்பாக செந்தில்பாலாஜி, அரவக்குறிச்சி காமராஜர் நகரில் உள்ள திமுக. தேர்தல் அலுவலகத்தில் இருந்து அரவக்குறிச்சி தாலுகா அலுவலகத்திற்கு ஆதரவாளர் களுடன் ஊர்வலமாக சென்றார். இதில் முன்னாள் அமைச்சர்கள் பொன்முடி, சின்னச்சாமி மற்றும் திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண் டனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் பேட்டி

கொழும்பு, ஏப்ரல். 24- தீவிரவாதிகளின் திசைதிருப்பும் முயற்சியை சமுதாயம் ஒருபோதும் ஆதரிக்காது; இலங்கை குண்டு வெடிப்பு சம்பவத்தால் முஸ்லிம்களும் விரக்தி அடைந்துள்ளனர் என்றும், முஸ்லிம்கள் எப்போதும் அமைதி யையே விரும்புவர்கள் என்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித் துள்ளார்.

இலங்கை குண்டு வெடிப்பு சம்பவத்தில் உள்ளூர் இஸ் லாமிய அமைப்பு மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளதால் அங்குள்ள முஸ்லிம்களுக்கு அச்சமும், பதற்றமும் ஏற் பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கை சம்பவம் குறித்து ரவூப் ஹக்கீம் கூறுகையில், "வெடிகுண்டு சம்பவத்தால் முஸ்லிம் சமுதாயத்தினரும் மற்றவர்களைப் போன்று விரக்தி அடைந்துள்ளனர். தீவிரவாதிகளின் திசை திருப்பும் நடவடிக்கைக்கு முஸ்லிம் சமுதாயம் அணு வளவும் ஆதரவு அளிக்காது.

முஸ்லிம்கள் மற்றும் சில குறிப்பிட்ட சந்தர்ப்ப ங்களில் கிறிஸ்தவர் களுக்கும் சென்ற சில ஆண்டுகளாக வன்முறைகள் நிகழ்த்தப்படுகின்றன. சிங்கள, புத்த மத குழுவினர் இந்த வன்முறை தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், முஸ்லிம் சமுதாயம் எப்பொழுதும் அமைதியையே விரும்புகிறது. அதேசமயம் சமுதாய மக்கள் தங்களது நிலைப்பாடு குறித்து ஆய்வு செய்ய வேண்டும்.

இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அல் முஸ்லிம் ஆத் என்ற முஸ்லிம் மகளிர் அமைப்பின் தலைவர் மரினா தாஹா ரஃபை கூறுகையில், "கிறிஸ்தவர்களுடன் எங் களுக்கு சிறிதளவும் கருத்து வேறு பாடு கிடையாது. குண்டுவெடிப்பு சதிகாரர்கள் செய்த செயல் இஸ்லாமிய கொள்கைகளுக்கு முற்றிலும் மாற்றமானது என்று தெரிவித்தார்.

கோத்ரா கலவரத்தின்போது பாதிக்கப்பட்ட பில்கிஸ் பானுவுக்கு அரசு பணி, வீடு, ரூ.50 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும்

குஜராத் அரசுக்கு உச்ச நீதிமன்றம் அதிரடி உத்தரவு

புதுடெல்லி, ஏப். 24- குஜராத்தில் 2002ம் ஆண்டு நடந்த கோத்ரா வன்முறையின் போது பாதிக்கப்பட்ட பில்கிஸ் பானுவுக்கு ரூ50 லட்சம் இழப்பீடு, அரசு வேலை, வீடு வழங்க வேண்டும் என்று அம்மாநில அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2002ம் ஆண்டு, கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து குஜராத் தில் வன்முறை வெடித் தது. அப்போது, பல்கிஸ் பானு என்ற பெண் 11 பேர் கொண்ட கும்பலால் பலாத்காரம் செய்யப் பட்டார். அவரது குடும்பத்தைச் சேர்ந்த 7 பேரை கொன்றது.

இந்த வழக்கில் பலாத்காரத்தில் ஈடுபட்ட 11 பேருக்கும், 2008ம் ஆண்டு ஜனவரி 21ம் தேதி சிறப்பு நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்தது. ஆனால் குற்றம் சாட்டப்பட்ட ஐபிஎஸ் அதிகாரி, 2 போலீசார், 2 மருத்துவர்கள் உள்ளிட்ட 7 பேர் விடுவிக்கப்பட்டனர்.

இதனை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், ஐபிஎஸ் அதிகாரி உள்ளிட்ட 7 அதிகாரிகளும் குற்றவாளிகள் என்று மும்பை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும் ரூ5 லட்சம் இழப்பீட்டை ஏற்றுக் கொள்ள மறுத்த பல்கிஸ் பானு, கூடுதல் இழப்பீடு கோரி மாநில அரசுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத் தார். விசாரணையில், தவறு செய்த அதிகாரிகள் தொடர்ந்து பணியில் நீடிப்பதாக பானு தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

இதையடுத்து தவறு இழைத்த போலீஸ் அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும், அவர்கள் பணி ஓய்வில் இருந்தால் ஓய்வூதியப் பலன்களை நிறுத்தும்படியும், ஐபிஎஸ் அதிகாரியின் பதவியைக் குறைக்கும்படியும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இந்நிலையில் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமை யிலான அமர்வு முன் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது குஜராத் அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், "தவறு செய்த போலீஸ் அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. ஐபிஎஸ் அதிகாரி யின் பதவி, இரண்டு நிலைகள் (ரேங்க்) குறைக்கப் பட்டுள்ளது" என்று தெரி வித்தார்.

இதனை தொடர்ந்து நீதிபதிகள் பிறப்பித்த உத்தர வில், "இந்த கொடூர சம்பவத் தில் பாதிக்கப்பட்ட பல்கிஸ் பானுவுக்கு ரூ50 லட்சம் இழப்பீடு, அரசு வேலை, தங்கு வதற்கு வீடு ஆகியவற்றை வழங்க வேண்டும்" என்று குஜராத் மாநில அரசுக்கு உத்தர விட்டனர். வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி தற்போதைய காலகட்டத்தில் பணம் தான் பிரச்சினைகளுக்கு தீர்வு. இந்த நிவாரணத்தால் பல்கிஸ் பானுவின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்குமா? பல்கிஸ் பானுவை நோக்கி நீங்கள் எவ்வளவு இழப்பீடு கோரி னாலும் அதனை கொடுக்க இந்த நீதிமன்றம் உத்தரவிடும் என்று தெரிவித்தார்.

வழக்கை தாமதப்படுத்தி யதற்கும் நீதிபதி கண்டனம் தெரிவித்தார்.

பொன்பரப்பியில் நடந்த கலவரத்தை கண்டித்து வி.சி.க உள்ளிட்ட திமுக கூட்டணி கட்சிகள் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஏப்ரல். 24- பொன்பரப்பியில் தேர்தல் நாளன்று ஒரு பிரிவினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதை கண்டித்து விடுதலை சிறுத்தைகள் கட்சி உள்ளிட்ட திமுக கூட்டணி கட்சியினர் சென்னையில் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர். கடந்த 18ம் தேதி மக்களவை தேர்தல் வாக்குபதிவின் போது அரியலூர் மாவட்டம் பொன்பரப்பி கிராமத்தில் ஒரு பிரிவினரை குறி வைத்து தாக்கல் நடத்தப்பட்டது. அதில் ஏராளமான வீடுகள் சேதமடைந்துள்ளன. இந்த தாக்குதலை கண்டித்தும், தாக்குதலில் ஈடுபட்டவர்களை கைது செய்ய வலியுறுத்தியும் விடுதலை சிறுத்தை கட்சி சார்பில் சென்னை வள்ளுவர்கோட்டம் அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

விசிக-வின் தலைவர் தொல். திருமாவளவன் தலைமையிலான இந்த ஆர்ப்பாட்டத்தில் திமுக செய்தி தொடர்பாளர் டி.கேஎஸ். இளங்கோவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் கபால கிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி துணைத்தலைவர் ஜெயக்குமார் உள்ளிட்ட கூட்டணி கட்சி தலைவர்கள் கலந்து கொண்டனர். இது தவிர, திராவிட இயக்க தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் கபவீர பாண்டியன், திரைப்பட இயக்குநர் கருபழனியப்பன் ஆகியோர் பங்கேற்றனர்.

காங்கிரசில் இணைந்தார் பாஜக எம்.பி

புதுடெல்லி, ஏப்ரல். 24- பாஜக சார்பில் போட்டி யிட வாய்ப்பு வழங்காததால் அதிருப்தியில் இருந்த எம்பி உதித்ராஜ் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார்.

வடமேற்கு டெல்லி தொகுதியில் பாஜக சார்பில் போட்டி யிட்டு எம்பியானவர் உதித்ராஜ். தற்போதைய மக் களவைத் தேர்தலிலும் அதே தொகுதியில் போட்டி யிட தனக்கு வாய்ப்பளிக்க வேண்டு மென கட்சி தலைமையிடம் விருப்பம் தெரிவித்ததாக தெரிகிறது. தனது கோரிக்கையை முன்வைத்து டெல்லியில் உள்ள பாஜக அலுவலகத்தில் தனது ஆதரவாளர்களுடன் போராட்டத்தில் ஈடுபட்டார்.

6 ஆம் கட்ட தேர்தலுக்கான வாக்குப்பதிவு மே 12 ஆம் தேதி டெல்லியில் நடைபெறும் நிலையில், கிழக்கு டெல்லியில் கிரிக்கெட் வீரர் கவுதம் கம்பீர், புதுடெல்லியில் மீனாட்சி லேகி ஆகியோரை வேட் பாளர்களாக பாஜக அறிவித்துள்ளது. ஆனால், உதித்ராஜ் ஓரங்கட்டப் பட்டார்.

இந்த அதிருப்தியின் தொடர்ச்சி யாக, வடமேற்கு தொகுதி யின் வேட்பாளர் என்ற அறிவிப்புக்காகக் காத்திருப் பதாக தனது ட்விட்டர் பக்கத் தில் பதிவிட்டிருந்த உதித் ராஜ், வாய்ப்பளிக்கப்படவில்லை எனில் பாஜகவிலிருந்து விலகப் போவதாகவும் குறிப் பிட்டிருந் தார். இந்நிலையில், மக்களவை தொகுதியில் போட்டியிட சீட் தராத தால் பாஜக எம்பி உதித் ராஜ்ராகுல்காந்தி முன்னிலையில் காங்கிரஸில் இணைந்தார்.

அல்-குர்ஆன் உமுதமொழி

9. அத்தவ்பா - பாவமீட்சி

(மதனீ 113) வசனங்கள்: 129

13. தங்கள் சத்திய உடன்படிக்கைகளை முறித்து (நம்) தூதரை (ஊரைவிட்டு) வெளியேற்றவும் விரும்பி (அதற்காக) முயற்சித்த மக்களிடம் நீங்கள் போர் புரிய வேண்டாமா? அவர்கள்தான் (இத்தகைய விஷமத்தை) உங்களிடம் முதலில் ஆரம்பித்தனர். அவர்களுக்கு நீங்கள் பயப்படுகிறீர்களா? உண்மையாகவே நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால் நீங்கள் பயப்படத் தகுதியானவன் அல்லாஹ் (ஒருவன்) தான்.

14. நீங்கள் அவர்களிடம் போர் புரியுங்கள். உங்கள் கைகளைக் கொண்டே அல்லாஹ் அவர்களுக்கு வேதனை கொடுத்து, அவர்களை இழிவுபடுத்தி, அவர்களை நீங்கள் வெற்றிபெற உங்களுக்கு உதவியும் புரிந்து, நம்பிக்கை கொண்ட மக்களின் உள்ளங்களுக்குத் திருப்தியுமளிப்பான்.

15. (அவர்கள் மீது) இவர்கள் உள்ளங்களில் (குமுறிக் கொண்டு) உள்ள கோபங்களையும் போக்கிவிடுவான். அல்லாஹ் (அவர்களிலும்) தான் விரும்பியவர்களின் மன்னிப்புக்கோருதலை அங்கீகரிக்கிறான். ஏனென்றால், அல்லாஹ் மிக அறிந்தவன் ஞானமுடையவன் ஆவான்.

16. (நம்பிக்கையாளர்களே!) உங்களில் (உண்மையாகவே மனம் விரும்பி) போர் புரிந்தவர்கள் யாரென் பதையும் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும், நம்பிக்கையாளர்களையும் தவிர (மற்றெவரையும் தங்கள்) அந்தரங்க நண்பர்களாக எடுத்துக் கொள்ளாதவர்கள் யார் என்பதையும், அல்லாஹ் (உங்களைச் சோதித்து) அறிவிக்காமல், நீங்கள் விட்டு விடப்படுவீர்கள் என்று எண்ணிக் கொண்டீர்களா? அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிந்தவன் ஆவான்.

17. இணைவைத்து வணங்கும் இவர்கள், தாங்கள் நிராகரிப்பவர்கள்தான் என்று (பகிரங்கமாக) கூறிக் கொண்டிருக்கும் வரை, அல்லாஹ்வுடைய மஸ்ஜிதுகளைப் பரிபாலனம் செய்ய அவர்களுக்கு உரிமையில்லை. இவர்களுடைய நன்மைகள் அனைத்தும் அழிந்துவிட்டன. அவர்கள் என்றென்றும் நரகத்திலேயே தங்கி விடுவார்கள்.

18. எவர்கள் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் நம்பிக்கை கொண்டு தொழுகையையும் கடைப் பிடித்து, ஜகாத்தும் கொடுத்து வருவதுடன், அல்லாஹ்வைத் தவிர மற்றெவருக்கும் பயப்படாமலும் இருக்கிறார்களோ, அவர்கள்தான் அல்லாஹ்வுடைய மஸ்ஜிதுகளைப் பராமரிக்கத் தகுதியுடையவர்கள். இவர்கள்தான் நேரான வழியில் இருப்பவர்கள்.

அத்:3 – வசனம் 13 – 18

மொழி பெயர்ப்பு: அல்லாமா அப்துல் ஹமீது பாகவி (ரஹ்)

அண்ணல் நபி (ஸல்) கண்ணல் மொழி

மண்ணில் எந்த உயிரினமும் ஆண்டவனால் விதிக்கப் பட்ட உணவு பூரணமாகக் கிடைக்காத வரை மரணிப்பது இல்லை. அதைப்போன்று எந்த இடத்தில் அது மரணிக்க வேண்டும் என்று இறைவன் முடிவெடுத்தால் அதற்கு ஏதாவதொரு தேவையை அந்த குறிப்பிட்ட இடத்தில் உண்டு பண்ணுகிறான்.

நூல் –திர்மிதி

சிந்தனைக் களஞ்சியம்

இஸ்லாமிய வரலாறு வீரமும், விவேகமும், மிகுந்தது - சுவையும் பயனும் செறிந்தது - எல்லாவற்றையும்விட உயிரோட்டம் நிறைந்தது. நடமாடும் மனிதர்களில் நான்கில் ஒரு பகுதியினரை தம் வழியிலே பிணைத்து, நாடுகளின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதிகளில் அரசோச்சும் ஆண்மை படைத்ததாக சிறந்து. இன்றைய உலக நிகழ்ச்சிகளில் நல்ல பல நிகழ்ச்சிகளை ஊக்குவித்துக் கொண்டிருக்கும் மாபெரும் பேரியக்கமாக மாறிவிட்டிருக்கிறது இஸ்லாமிய திருநெறி.

சிராஜுல் மில்லத்

தொழுகை நேரம்

ஏப்ரல் 24 முதல் 30 வரை (சென்னைக்கு மட்டும்)

பஜ்ரு - 04 -35	ம.ஃரிப் - 06 - 28
ளுஹர் - 12 - 22	இஷா - 07 - 41 (ஷாபி)
அஸர் - 03 -18 (ஷாபி)	இஷா - 07 - 49 (ஹனபி)
அஸர் - 04 -30 (ஹனபி)	

சூரிய உதயம் : 05 - 51 அஸ்தமனம் : 06 - 23

செய்தி அனுப்ப மின்னஞ்சல்: manichudardaily@gmail.com

விளம்பரம் மற்றும் நிர்வாக மின்னஞ்சல்: manichudar.ac@gmail.com

சந்தா, விளம்பர கட்டணங்கள் அனுப்ப வங்கிக் கணக்கு

Account Name :MANICHUDAR
Account No :030502000004571
Bank :INDIAN OVERSEAS BANK
Branch :MUTHIYALPET, CHENNAI-600 001
IFSC CODE :IOBA0000305
SWIFT CODE :IOBAINBB305

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் சரியாக செயல்படாமல் இருப்பதுதான் பிரதமர் மோடியின் டிஜிட்டல் இந்தியாவா?

அகிலேஷ் யாதவ் கேள்வி

லக்னோ, ஏப்ரல்.24-

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் சரியாக செயல்படவில்லை என்று புகார் வந்துள்ளது. இதுதான் பிரதமர் மோடியின் டிஜிட்டல் இந்தியாவா? என்று உத்திரப்பிரதேச சமாஜ்வாதி கட்சி தலைவர் அகிலேஷ் யாதவ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக கூட்டுரையில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டுள்ளதாவது:

மக்களவைத் தேர்தலில் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் முறைகேடு நடைபெற்றுள்ளது. அந்த வகை இயந்திரங்களை எப்படி கையாள்வது என்று பயிற்சி பெறாதவர்களே தேர்தல்

அதிகாரிகளாக இருப்பதாக மாவட்ட ஆட்சியர்கள் தெரிவித்துள்ளனர். 350க்கும் மேற்பட்ட மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் மாற்றப்பட்டுள்ளன என்று அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பதிவை தேர்தல் ஆணைய பக்கத்திலும் ''டேக்' செய்துள்ளார்.

உத்தரப் பிரேதசத்தில் செவ்வாய்க்கிழமை தனது வாக்கை பதிவு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அகிலேஷ் கூறியதாவது:

ராம்பூர், பதாவன் ஆகிய தொகுதிகளில் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் முறைகேடு நடை பெற்றுள்ளதாக எழுந்துள்ள புகாரை தேர்தல் ஆணையம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். உத்தரப் பிரதேச அமைச்சர் ஒருவரின் மகள் போட்டியிடும் பதாவன் தொகுதியில் வாக்குச் சாவடிகளில் முறைகேடு நடப்பதாக கேள்விபட்டேன். மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களும் சரியாக செயல்படவில்லை என்று புகார் எழுந்துள்ளது. இதுதான் பிரதமர் மோடியின் டிஜிட்டல் இந்தியாவா?

மைன்புரி தொகுதியில் சமாஜவாதி நிறுவனர் முலாயம் சிங் யாதவ் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவார்.

எனது உறவினர் சிவபால் யாதவ் போட்டியிடும் ஃபெரோஸாபாத் தொகுதியில் சமாஜவாதி வேட்பாளர் அக்ஷய் யாதவ் வெற்றி பெறுவார் என்றார் அவர்.

''உத்தரப் பிரதேச அமைச்சர் சுவாமி பிரசாத் மௌரியா அவரது மகளுக்கு ஆதரவாக வாக்குகளை பெற வாக்குச் சாவடியில் முயன்றதாக சமாஜவாதி புகார் அளித்துள்ளது' என்று கூடுதல் தலைமை தேர்தல் அதிகாரி பி.ஆர்.திவாரி கூறினார்.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு எதிரான புகார் குறித்து 3 நீதிபதிகள் குழு விசாரிக்கிறது

புதுடெல்லி, ஏப்ரல்.24-

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய்க்கு எதிரான புகார் குறித்து விசாரிக்க 3 நீதிபதிகள் குழு அமைக்கப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்றத் தில் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய்க்கு அடுத்து மூத்த நீதிபதியாக திகழ்பவர் எஸ்.ஏ. போப்டே. தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய்க்கு எதிராக முன்னாள் பெண் ஊழியர் தெரிவித்த பாலியல் புகார் குறித்து போப்டே தலைமையிலான 3 நீதிபதிகள் குழு விசாரணை நடத்த வுள்ளது.

இதுகுறித்து பிடிஐ செய்தியாளருக்கு போப்டே அளித்த பேட்டி வருமாறு:

தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய், தனக்கு எதிரான புகார் குறித்து விசாரணை நடத்துவதற்கு என்னை நியமித்துள்ளார். நானும், உச்சநீதிமன்றத்தில் எனக்கு அடுத்து மூத்த நீதிபதியாக விளங்கும் என்வி. ரமணா, பெண் நீதிபதியான இந்திரா பானர்ஜி ஆகியோர் அடங்கிய குழுவை விசாரணைக்கு ஏற்படுத்த முடிவு செய்துள்ளேன். தலைமை நீதிபதிக்கு எதிராக புகார்கள் தெரிவித்து நீதிபதிகளுக்கு கடிதம் எழுதிய பெண்ணுக்கு ஏற்கெனவே நான் நோட்டீஸ் அனுப்பி விட்டேன்.

இந்த விவகாரம் குறித்த முதல் விசாரணை வெள்ளிக் கிழமை நடைபெறும். இந்த விசார ணையானது, வழக்கமான விசாரணை போல இருக்காது. இருதரப்பு சார்பாக வழக்குரைஞர்கள் யாரும் வாதிடமாட்டார்கள்.பிரத்யேக அறையிலேயே விசாரணை நடத்தப்படும். விசாரணையை முடிப்பதற்கு கால அளவு எதுவும் நிர்ணயிக்கவில்லை. விசாரணையின் முடிவில் தெரிய வரும் உண்மையின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் எஸ்.ஏ. போப்டே.

முன்னதாக, தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய்க்கு எதிராக முன்னாள் பெண் ஊழியர் ஒருவர் பாலியல் புகார் தெரிவித்து நீதிபதி களுக்கு கடிதம் எழுதினார். இந்தக் புகாரை தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் மறுத் திருந்தார். மேலும், தலைமை நீதிபதியின் அலு வலகத்தை மிகப்பெரிய சக்திகள் முடக்க விரும்புவதாகவும், அந்த சக்திகளே, இந்த விவகாரத்தின் பின்னணியில் இருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

தமிழக அரசின் கோரிக்கை ஏற்பு

முல்லைப் பெரியாறு வாகன நிறுத்த மைய வழக்கு விசாரணை ஜூலைக்கு ஒத்திவைப்பு

புதுடெல்லி, ஏப்ரல்.24-

தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று முல் லைப் பெரியாறு வாகன நிறுத்த மையம் வழக்கு விசாரணை உச்சநீதி மன்றம் ஜூலை மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முல்லைபெரியாறு வாகன நிறுத்தம் மையம் தொடர்பான வழக்கில் தமிழக அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் திங்கட் கிழமை பிரமாண பத்திரம் தாக்கல் செய்யப் பட்டது.

அதில், கேரள அரசால் மேற் கொள்ளப்பட்டு வரும் வாகன நிறுத்த மையத்தின் கட்டுமானப் பணிகள் நிரந்தர மானவையாக உள்ளன என்றும் அதற்கு ஆதாரமாக புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டிருந்தது. இதைத் தொடர்ந்து, தமிழக அரசின் இடைக்கால மனு திட்டமிட்டபடி செவ்வாய்க் கிழமை (ஏப்ரல் 23) விசாரிக்கப்படும் என்று நீதிபதிகள் தெரிவித்திருந்தனர்.

இதன்படி., தமிழக அரசின் இடைக்கால மனு உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் எஸ்ஏபோப்டே, எஸ்கே கெநூல், இந்திரா பானர்ஜி ஆகியோர் அடங்கிய அமர்வில் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசின் சார்பில் வழக்குரைஞர் ஜி. உமாபதி ஆஜராகி, ''கேரள அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் வாகன நிறுத்த மையக் கட்டுமானப் பணிகள் நிரந்தரமானவையாக உள்ளன. இவை உச்சநீதிமன்றம் கடந்த 2017, டிசம்பர் 4-ஆம் தேதி பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக உள்ளன' என்றார்.

இதையடுத்து, கேரள அரசு சார்பில் ஆஜரானவழக்குரைஞர், ''தமிழக அரசின் பிரமாணப் பத்திரத்துக்கு பதில் அளிக்க 4 வாரம் அவ காசம் தேவை' எனக் கேட்டுக் கொண்டார். அவரது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், வழக்கு விசாரணை கோடை விடுமுறைக்குப் பிறகு நடைபெறும் எனத் தெரிவித்தனர். உச்சநீதி மன்றத்தின் கோடை விடுமுறை மே 13-இல் தொடங்கி ஜூன் 30-ஆம் தேதி நிறைவடைகிறது.

கடலூர் தேவனாம்பட்டினம் பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி பாராளுமன்ற தேர்தல் வாக்கு எண்ணும் மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் வெ. அன்புச்செல்வன் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சரவணன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

நாட்டின் வரலாற்றில் இவ்வளவு நீண்ட நாட்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டது கிடையாது

மம்தா பானர்ஜி பேட்டி

கனகூல், ஏப்.24-

மேற்கு வங்கத்தின் ஹூக்ளி மாவட்டத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி சார்பில் நடந்த மக்களவை தேர்தல் பிரசார கூட்டத்தில் கட்சியின் தலைவரும், மாநில முதல்வருமான மம்தா பானர்ஜி கலந்துகொண்டார்.

அப்போது பேசிய மம்தா பானர்ஜி, "நாட்டின் வரலாற்றிலேயே இவ்வளவு நீண்ட நாட்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டது கிடையாது. கோடையின் உச்சத்தில் மக்களவை தேர்தல் நடத்தப்படுவது நமது துரதிஷ்டம். தற்போது வெயில் அதிகமாக இருக்கிறது. கோடை வெப்பத்தோடு போராடி மக்கள் தங்களது வாக்குகளை பதிவு செய்து வருகின்றனர். கடந்த ஆண்டு மேற்குவங்க அரசு மார்ச்சுக்குள் பஞ்சாயத்து தேர்தலை முடித்துவிட்டது. ஆனால் மக்களவை தேர்தல் மே வரை நடக்கிறது. மக்களவை தேர்தல் பாஜ தலைவர்களுக்கு ஏற்றவாறு திட்டமிடப்பட்டு

நடத்தப்படுகிறது. மக்களவை தேர்தல் 7 கட்டங்களாக நடக்கிறது. ஒரு மாநிலத்தில் இருந்து மற்றொரு மாநிலத்திற்கு பிரசாரத்திற்காக பாஜ தலைவர்கள் செல்ல வேண்டும் என்பதற்காக அதற்கேற்றவாறு தேர்தல் நடத்த திட்டமிட்டுள்ளனர்" என்றார்.

இதனிடையே மேற்கு வங்கத்தில் 5 மக்களவை தொகுதிகளில் நேற்று மூன்றாவது கட்டமாக வாக்குப்பதிவு நடந்தது. 92 சதவீத வாக்குப்பதிவு மையங்களில் மத்திய பாதுகாப்பு படையினர் பாதுகாப்பு பணிக்காக நிறுத்தப்பட்டு இருந்தனர்.

இதுகுறித்து மம்தா பானர்ஜி கூறியதாவது: மால்டாஹரா தக்ஷினில் உள்ள இங்கிலீஷ்பஜாரில் வாக்குப்பதிவு மையத்திற்குள் மத்திய பாதுகாப்பு படை வீரர்கள் அமர்ந்திருந்தனர். அவர்கள் பாஜவிற்கு வாக்களியுங்கள் என பொதுமக்களிடம் கூறியதாக எனக்கு தகவல் கிடைத்தது. இதுபோன்ற செயலில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு உரிமை கிடையாது. இதுகுறித்து தேர்தல் ஆணையத்திடம் நாங்கள் தெரிவித்துள்ளோம்.

மத்திய பாதுகாப்பு படை வீரர்கள் எதற்காக இதுபோன்று செய்கிறார்கள். போலீசார் வாக்குப்பதிவு மையத்திற்குள் செல்லக்கூடாது. பாஜ மத்திய பாதுகாப்பு படை வீரர்களை பயன்படுத்திக் கொள்கிறது. நீங்கள் 2016ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலிலும் இதேபோன்று தான் செய்தீர்கள். நான் அதை மறக்கவில்லை. மேற்கு வங்கம் பாஜவிற்கு நல்ல பாடத்தை கற்பிக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

மக்கள் விரோத கொள்கைகளை முன்னிருத்தி செயல்படும் மத்திய பா.ஜ.க. அரசை அகற்ற வேண்டும்

மாயாவதி சபதம்

லக்னோ, ஏப்ரல்.24-

வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் தோல்வி அடைந்துள்ள மற்றும் மக்கள் விரோத கொள்கைகளை முன்னிருத்தி செயல்படும் பாஜக அரசு நிச்சயமாக அகற்றப்பட வேண்டியது என்று பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதி விமர்சித்துள்ளார்.

''பக்கோடா விற்பதும் ஒரு வேலைவாய்ப்புதான்' என்று பிரதமர் நரேந்திர மோடி முன்பு கூறியிருந்தார். பாஜக தேசிய தலைவர் அமித் ஷாவும் அதற்கு ஆதரவு தெரிவித்திருந்தார். இந்த அரசு நிச்சயமாகவே அகற்றப்பட வேண்டியது' என்று மாயாவதி கூறியுள்ளார்.

வாக்களிக்கப்படு என்பது அரசமைப்புச் சட்டப்படி நம் அனைவருக்கும் அளிக்கப்பட்டுள்ள உரிமை. அதன் மூலம் நம்மை யார் ஆள வேண்டும் என்பதை முடிவு செய்ய முடியும். எனவே, தேர்தல் என்பதை நமது நலன் சார்ந்தது என்பதை உணர்ந்து மக்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும். மக்கள் நலமுடனும், வளமுடனும் வாழநல்லாட்சி தேவை. அதற்கு மக்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் முக்கியம்' என்று மாயாவதி மற்றொருகூட்டுரைப் பதிவில் கூறியுள்ளார்.

இந்த அரசு நிச்சயமாகவே அகற்றப்பட்ட வேண்டியது' என்று மாயாவதி கூறியுள்ளார்.

விவசாயிகள் தற்கொலை, வேலையில்லா திண்டாட்டம் போன்ற பிரச்சினைகளில் பிரதமர் மோடி மவுனம் காப்பது ஏன்?

சரத் பவார் கேள்வி

தானேஏப்ரல்.24-

நாட்டில் நிலவி வரும் விவசாயிகள் தற் கொலை, வேலையில்லா திண்டாட்டம் போன்ற பிரச்னைகளில் பிரதமர் மோடி வேண்டுமென்றே மௌனம் காப்பதன் காரணம் என்ன? என தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவர் சரத் பவார் கேள்வி எழுப்பியுள்ளார்.

மக்களவைத் தேர்தலை யொட்டி மகாராஷ்டிர மாநிலம் கல்யாண் தொகுதி யின் தேசியவாத காங்கிரஸ் வேட்பாளர் ஆனந்த் பரஞ்சாபேவை ஆதரித்து தானே மாவட்டம் பாயந்தர் பகுதியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் சரத் பவார் பேசியதாவது:

பாஜக அரசின் அலட்சியம் காரணமாக, இதுவரை 11,990 விவசாயிகள் தற்கொலை செய்து இறந்து விட்டதாக அரசின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இதனை தடுப்பதற்கான எந்த நடவடிக்கைகளையும் அரசு இறுதிவரை எடுக்கவே இல்லை.

இதேபோல நீர் பற்றாக்குறை, விளை பொருள்களுக்கு கட்டுபடியான விலை கிடைக்காதது, பண்ணை பிரச்னைகள் போன்ற விவசாயிகளின் எந்த துன்பத்தையும் தீர்க்க இந்த அரசு முயற்சிக்கவில்லை. இதேபோல, ரஃபேல் ஊழல் விவகாரத்திலும் மோடி மௌனம் காக்கிறார். மோடியின் ஆட்சியில், தன்னாட்சி அமைப்புகளான ரிசர்வ் வங்கி, சிபிஐ மற்றும் உச்சநீதி மன்றத்தின் செயல் பாடுகள் முற்றிலுமாக சிதைக்கப் பட்டுள்ளது என்று பேசினார்.

ரஃபேல் போர் விமான ஊழல் வழக்கு சீராய்வு மனு மீது ஏப். 30-ந்தேதி விசாரணை

உச்சநீதிமன்றம் அறிவிப்பு

புது டெல்லி, ஏப். 24 -

ரஃபேல் போர்விமான ஒப்பந்த ஊழல்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனுவை வரும் 30 ஆம்தேதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாகஉச்சநீதி மன்றம் தெரிவித்துள்ளது. மத்திய பாஜக, ஆட்சியின் போது ரஃபேல்போர் விமானத்தை வாங்க பிரான்ஸ் நிறுவனத்துடன் போடப்பட்ட ஒப்பந்தத்தில்அனில் அம்பானி நிறுவன த்திற்கு ஆதரவாகபல்லாயிரம் கோடிரூபாய் முறைகேடு நடை பெற்றதாக புகார்எழுந்தது. இது தொடர்பாக சிறப்பு புலனாய்வுக் குழுஅமைத்து விசாரிக்கக்கோரி தொடரப் பட்டமனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இதையடுத்து சீராய்வு மனுத் தாக்கல் செய்யப் பட்டது. அப்போதுபோர்

விமான ஒப்பந்தம்தொடர்பாக ''தி இந்து'''' ஆங்கில நாளிழிதலில் வெளியிட்ட ஆவணங்களை ஏற்கக் கூடாது எனமத்திய அரசு முறையிட்டது. ஆனால், மத்தியஅரசின் கோரிக்கையை நிராகரித்த உச்ச நீதிமன்றம், தி இந்து பத்திரிகை வெளியிட்ட ஆவணங்கள் அனைத்தும் சாட்சியங்களாக ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவித்தது. விசாரணை தேதிபின்னர் அறிவிக்கப் படும்என்று கூறி ஒத்திவைத்தது. இந்நிலையில், பிரதமர் ஒரு சவுகிதார் எனராகுல் காந்தி கூறிவருவதை எதிர்த்து பாஜக, வேட்பாள ர்மீனாட்சி லெகிதொடர்ந்த வழக்கைநேற்று விசாரித்த உச்சநீதிமன்றம், ரஃபேல் சீராய்வு மனுக்களுடன்சேர்ந்து இந்த வழக்கும்வரும் 30 ஆம் தேதிவிசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனதெரிவித்தது.

பிரதமர் மோடிக்கு எதிராக வாரணாசியில் பெண் வேட்பாளர் போட்டி

சமாஜ்வாதி கட்சி களம் இறக்கியது

லக்னோ, ஏப்.24-

பிரதமர் மோடி போட்டி யிடும் வாரணாசி தொகுதியில் அவருக்கு எதிராக பெண் வேட் பாளர் ஒருவரை சமாஜ்வாதி கட்சி களம் இறக்கியுள்ளது.

யோகி ஆதித்யநாத் தலைமை யிலான, பாஜ, ஆட்சி நடக்கும் உத்தர பிரதேசத் தில், மொத்தம் உள்ள, 80 லோக் சபா தொகுதிகளுக்கும், ஏழு கட்டங்களாக தேர்தல் நடத்தப் படுகிறது.

இதுவரை நடந்த மூன்று கட்ட தேர்தலில், 26 தொகுதி களுக்கு தேர்தல் நடந்து முடிந்து விட்டதுபிரதமர் நரேந்திர மோடி., இம்முறையும், வாரணாசி தொகுதியில் போட்டியிடுகிறார். இந்த தொகுதியில், மே, 19ல் தேர்தல் நடக்கிறதுபிரதமர் மோடி யை எதிர்த்து, காங், சார்பில், அக்கட்சியின் கிழக்கு உத்தர பிரதேச பொதுச் செயல ரும்,கட்சியின் தலைவர் ராகுலின் சகோதரியுமான, பிரி யங்கா போட்டியிடுவார் என, கூறப் படுகிறது.

இந்நிலையில், வாரணாசி தொகுதியில், பிரதமர் மோடி க்கு எதிராக, ஷாலினி யாதவ் போட்டியிடுவார் என, சமாஜ் வாதி கட்சி நேற்று அறிவித்தது. புதிய வேட்பாளர் ராஜ்யசபா முன்னாள் துணைத் தலைவரும், காங், மூத்த தலைவர்களில் ஒருவருமாக இருந்த, ஷியாம் லால் யாதவின் மருமகளான ஷாலினி, நேற்று முன்தினம், காங்கிரசிலிருந்து விலகி, சமாஜ்வாதி கட்சியில் சேர்ந்தார்.

மாநிலத்தில், 2017ல் நடந்த உள்ளாட்சி தேர்த லில், வாரணாசி நகராட்சி தலைவர் பதவிக்கு, காங், சார்பில் போட்டி யிட்டு, ஷாலினி தோல்வி யடைந்தார்ஷாலினி யாதவ் கூறுகையில், "அகிலேஷ் யாதவ் தலைமையில், கட்சி பணி யாற்று வேன். அவருடைய உத்தர வுக்கு ஏற்ப செயல் படுவேன்," என்றார்.

மோடி நம்பும் இரண்டு பேர்

ஒரு காலத்தில் பாஜக. இரண்டு பேரை நம்பியது. அவர்கள் வாஜ்பாயும், அத்வானியும். ஒருவர் மறைந்து விட்டார். இன்னொருவர் அவர்களாலேயே நடை பிணமாக்கப்பட்டு விட்டார்.

ஐந்தாண்டுகளுக்கு முன்னால் பாஜக. அடுத்த இரண்டு பேரை நம்பியது. அவர்கள் நரேந்திர மோடியும், அமித்ஷாவும். இந்த இரண்டு பேரின் பிம்பமும் இந்தியா முழுமைக்கும் கிழிந்து தொங்குகிறது. அது எந்தளவுக்கு என்றால், 'தயவுசெய்து குஜராத்தில் எல்லோரும் எனக்கு வாக்களித்துவிடுங்கள். இல்லாவிட்டால் குஜராத்திலேயே தோற்றவர் என்ற கெட்ட பெயர் ஏற்பட்டுவிடும்' என்று இரண்டு நாட்களுக்கு முன்னால் மோடி கெஞ்சுகிற அளவுக்கு 'செல்வாக்கு' சீரழிந்துவிட்டது. அமித்ஷா, மோடியின் பினாமியாகவே இன்னமும் அறியப்படுகிறாரே தவிர அகில இந்தியத் தலைவராக இன்று வரை இன்னமும் ஆகவில்லை.

இந்த மோசமான சூழ்நிலையைச் சரிசெய்ய இந்தத் தேர்தலில் இரண்டு பேர் பயன்படுத்தப்படுகிறார்கள்.

ஒருவர், சாத்வீ பிரக்யா சிங் தாக்குர்.

இன்னொருவர், அபிநந்தன் வர்த்தமான்.

முன்னவர், மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கில் மும்பை சிறையில் இருந்து ஜாமினில் வெளியில் வந்தவர்.

பின்னவர், இந்திய விமானப்படை விங் கமாண்டராக இருந்து பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்தி அவர்களால் பிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்.

முன்னவர், வெடிகுண்டு குற்றவாளி.

பின்னவர், தேசம் காக்கும் வீரர்.

இவர்களை நம்பித்தான் களத்தில் குதித்திருக்கிறது பாஜக. அடுத்தடுத்த கட்டங்களாக நடக்கும் தேர்தல்களில் படிப்படியாக அவர்களின் செல்வாக்கு சரிந்து வரும் நிலையில் இறுதிக்கட்ட முயற்சிகளாக இவர்களைப் பயன்படுத்தப் பார்க்கிறது பாஜக.

தேசப்பக்தி, மதப்பற்று ஆகிய நுண்மையான கருத்துக்களை தேர்தல் உத்திகளாக மாற்றுகிறார்கள் என்றால் அவர்களுக்குச் சொல்வதற்கு வேறு எதுவும் இல்லை என்பதுதான் பட்டவர்த்தனமாகிறது.

இந்திய ராணுவத்தின் வீரத்தையும், பலத்தையும், தேர்தல் லாபங்களுக்காகப் பயன்படுத்துவதைப் போலக் கீழ்த்தரமான காரியம் வேறு இருக்க முடியாது. பாஜக. விளம்பரங்களில் அபிநந்தன் வர்த்தமான் புகைப்படங்கள் இடம் பெறக்கூடாது என்று தேர்தல் ஆணையம் எச்சரித்த பிறகும் அவர் படம் பயன்படுத்தப்படுகிறது. அபி, இந்திய ராணுவ வீரரே தவிர பாஜகவின் பரப்புரைத்தொண்டரல்ல.இதை பிரதமர் மோடிக்கு பலரும் உணர்த்திய பிறகும் அவரும் விடவில்லை.

குஜராத் மாநிலம் பாடன் பகுதியில் நேற்று முன்தினம் நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, அபிநந்தனை பாஜகவின் தொண்டனைப் போல பாவித்துப் பேசி இருக்கிறார். அது அபிநந்தனை பாகிஸ்தான் விடுவித்தது தனது தனிமனிதச் சாதனையாகவும் தன் தோளில் தானே தட்டிக் கொண்டுள்ளார்.

"அபிநந்தனுக்கு ஏதும் நேர்ந்தால், 'பிரதமர் மோடி இப்படிச் செய்துவிட்டார்' என்று உலக நாடுகளிடம் பாகிஸ்தான் புலம்பும் நிலை ஏற்படும் என்று அந்த நாட்டுக்கு எச்சரிக்கை விடுத்தோம்."என்கிறார் மோடி. இதற்கும் இந்தியத் தேர்தலுக்கும் என்ன சம்பந்தம்? இதைவிட மோசமாக 'குஜராத்தின் எல்லையில் பாகிஸ்தானை தாக்கும் பீரங்கியை உருவாக்கியுள்ளோம்' என்றும் சொல்லி இருப்பதுதான். இந்திய ராணுவத்தின் ரகசியத்தை பொதுக்கூட்ட மேடையில் பீற்றிக் கொண்ட பிரதமரை இப்போதுதான் இந்தியா பார்க்கிறது! இதுதான் உண்மையான தேசத் துரோகம்.

அடுத்ததாக, இன்று பாஜகவின் முகமாக சாத்வீ பிரக்யா சிங் தாக்குர் மாற்றப்படுகிறார். இவர் மகாராஷ்டிரா மாநிலம் மாலேகானில் கடந்த 2008ம் ஆண்டு நடந்த குண்டு வெடிப்பில் ஏழு பேர் மரணத்துக்கு காரணம் ஆனதாகக் கைது செய்யப்பட்டவர். சிறையில் இருந்தவர். பிணையில் வெளியில் வந்திருக்கிறார். உடல் நலமில்லை என்று சொல்லி பிணையில் வந்திருக்கிறார். வந்தவர் மருத்துவமனைக்கு போகவில்லை. நாடாளுமன்றத்துக்கு போக ஆசைப்படுகிறார் அவர். மத்திய பிரதேச மாநிலம், போபால் மக்களவைத் தொகுதிக்கு பாஜக. வேட்பாளராகப் போட்டியிடப் போகிறார்.

9 ஆண்டுகள் சிறையில் இருந்தவர். குற்றவமற்றவர் என விடுவிக்கப்படவில்லை. பிணையில்தான் வந்துள்ளார். வழக்கு நடக்கிறது. மாலேகான் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். சாத்வீ பிரக்யா சிங் தாக்குர் தேர்தலில் போட்டியிட தடை விதிக்கக்கோரி தேர்தல் ஆணையத்திலும், இவ்வழக்கு நடைபெறும் என்ஐஏ. சிறப்பு நீதிமன்றத்தில் மனு தாக்கர் செய்துள்ளார்கள். வழக்கை நீதிபதி எடுத்துள்ளார். பதில் மனு தாக்கல் செய்ய சாத்வீக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதற்கு மத்தியில் சாத்வீ அளித்து வரும் பேட்டிகள் இந்தியாவின் ஜனநாயக நெறிமுறைகளுக்கு அச்சுறுத்தலாக அமைந்து வருகின்றன.

மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கில் கைதாகி மும்பை சிறையில் சாத்வீ இருந்தபோது அவரை விசாரித்தவர் பயங்கரவாத தடுப்பு பிரிவு காவல்துறை தலைவர் ஹேமந்த் கர்கரே. பின்னர் மும்பையில் நடந்த பயங்கரவாத சம்பவத்தில் ஹேமந்த் சுட்டுக் கொல்லப்பட்டார். "என்னை சிறையில் ஹேமந்த் துன்புறுத்தினார். அழிந்து போவீர்கள் என சபித்தேன். அதனால் கொல்லப்பட்டார்" என்று பேட்டி தந்துள்ளார் சாத்வீ. எதிர்ப்பு கிளம்பியதும் அந்த வார்த்தைகளை திரும்பப் பெற்றுக் கொண்டார்.

'ராமர் கோயில் அயோத்தில் கட்டப்பட வேடும். அங்கு முன்பு இருந்த சின்னத்தை உடைக்க நானும் சென்றிருந்தேன். உச்சியில் ஏறி நான் உடைத்தேன்' என்று அடுத்து இப்போது சொல்லி இருக்கிறார். இதற்கும் எதிர்ப்பு கிளம்பியது. ஆனால் இந்த வார்த்தைகளை திரும்பப் பெற மாட்டேன் என்கிறார் சாத்வீ.

மோடியை இந்திய மக்கள் ஏன் திரும்பப் பெற வேண்டும் என்பதற்கான ஆதாரம் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வருகிறது!

– நன்றி 'முரசொலி'
23–04–2019

மே. 19–ந் தேதி நடைபெறவுள்ள

4 சட்டபேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான திமுக பொறுப்பாளர், உறுப்பினர்கள் நியமனம்

பொதுச்செயலாளர் க.அன்பழகன் அறிவிப்பு

சென்னை, ஏப்.24-

4 தொகுதி இடைத்தேர்தலுக்கான திமுக பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.இதுகுறித்து, திமுக பொதுச்செயலாளர் க.அன்பழகன் வெளியிட்ட அறிவிப்பு: வருகிற 19ம் தேதி நடைபெற உள்ள திருப்பரங்குன்றம், ஓட்டப்பிடாரம் (தனி), அரவக்குறிச்சி, சூலூர் ஆகிய 4 சட்டப்பேரவை தொகுதிக்கான இடைத்தேர்தலில் தொகுதி பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அரவக்குறிச்சி தொகுதி: அரவக்குறிச்சி சட்டப்பேரவைத் தொகுதி பொறுப்பாளர்களாக சுப்புலட்சுமி ஜெகதீசன் (திமுக துணைப் பொதுச்செயலாளர்), கபொன்முடி எம்எல்ஏ, (விழுப்புரம் மத்திய மாவட்டச் செயலாளர்), விசெந்தில்பாலாஜி (கரூர் மாவட்டப் பொறுப்பாளர்) நியமிக்கப்பட்டுள்ளனர்.சபரமத்தி ஒன்றியம்: ஆர்.காந்தி, எம்எல்ஏ, (வேலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர்), சுமுத்துசாமி (ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர்), கரூர் ஒன்றியம்: டிஎம். செல்வகணபதி (தேர்தல் பணிக்குழுச் செயலாளர்), அரவக்குறிச்சி ஒன்றியம்: அரசக்கரபாணி, எம்எல்ஏ,

(திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர்) மற்றும் எம்.ஆர். கேபன்னீர்செல்வம் எம்எல்ஏ, (கடலூர் கிழக்கு மாவட்ட செயலாளர்) கொகாந்திசெல்வன் (நாமக்கல் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர்), கேஎஸ்மூர்த்தி (நாமக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர்), குன்னம் ராஜேந்திரன் (பெரம்பலூர் மாவட்டச் செயலாளர்),கேகேசெல்லபாண்டியன் (புதுக்கோட்டை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர்), ஆ.அங்கையற்கண்ணி (விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர்)

எஸ்எஸ்சிவசங்கர் (அரியலூர் மாவட்டச் செயலாளர்), கசுந்தர் எம்எல்ஏ, (காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர்), மாதவரம் எஸ்சுதர்சனம் எம்எல்ஏ, (சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர்), எம்எல்ஏக்கள் தாஉதயசூரியன், பெரியண்ணன் அரசு, உமதிவாணன், சிவிஎம்பிஎழிலரசன், டாக்டர் ஆர்டிஅரசு, ஏராமர், கேபிபிசாமி, அரவிந்த் ரமேஷ், விஜிராஜேந்திரன், அன்பில் மகேஷ்பொய்யாமொழி, எம்கேமோகன், துரை கிசரவணன், ஈஸ்வரப்பன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சூலூர் தொகுதி: சூலூர் சட்டப்பேரவை தொகுதி பொறுப்பாளர்கள்: விபிதுரைசாமி (துணைப் பொதுச்செயலாளர்), எவவேலு, எம்எல்ஏ, (திருவண்ணாமலை தெற்கு மாவட்டச் செயலாளர்), தென்றல் செல்வராஜ் (கோவை தெற்கு மாவட்ட பொறுப்பாளர்) நியமிக்கப்பட்டுள்ளனர். சுல்தான்பேட்டை ஒன்றியம்: தாமோ.அன்பரசன் (காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர்), சூலூர் தெற்கு ஒன்றியம்: ஏபிநந்தகுமார் எம்எல்ஏ, (வேலூர் மத்திய மாவட்டச் செயலாளர்), சூலூர் வடக்கு ஒன்றியம்: ஆராசா (கொள்கை பரப்புச் செயலாளர்) மற்றும் முபெசாமிநாதன் (மாநில இளைஞர் அணிச் செயலாளர்), அந்தியூர் செல்வராஜ் (மாநில ஆதிதிராவிடர்நலக்குழுச்செயலாளர்),காராமச்சந்திரன்(தேர்தல் பணிக்குழுச் செயலாளர்), திருச்செங்கோடு கந்தசாமி (சொத்துப் பாதுகாப்புக்குழு உறுப்பினர்), பாஅருண்குமார் (மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர்), பாமுமுபாரக் (நீலகிரி மாவட்டச் செயலாளர்), சிஆர். ராமச்சந்திரன் (கோவை வடக்கு மாவட்டச் செயலாளர்), கசெல்வராஜ் (திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர்),

என்நல்லசிவம் (ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர்), இராராஜேந்திரன் எம்எல்ஏ. (சேலம் மத்திய மாவட்டச் செயலாளர்), உள்ளிட்டோர் நியமிக்கப்பட்டுள்ளனர். திருப்பரங்குன்றம் தொகுதி: திருப்பரங்குன்றம் தொகுதி பொறுப்பாளர்களாக இபெரியசாமி எம்எல்ஏ, (துணைப் பொதுச்செயலாளர்), முமணிமாறன் (மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர்) நியமிக்கப்பட்டுள்ளனர். திருப்பரங்குன்றம் கிழக்கு ஒன்றியம்: பிமூர்த்தி, எம்எல்ஏ (மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர்), திருப்பரங்குன்றம் மேற்குஒன்றியம்: சுகல்யாணசுந்தரம் (தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர்), திருப்பரங்குன்றம் தங்கம் தென்னரசு (விருதுநகர் வடக்கு செயலாளர்), திருப்பரங்குன்றம் வடக்கு பகுதி: கோ. மாநகர் மாவட்டப் திருப்பரங்குன்றம்தெற்கு பெரியகருப் பன்எம். மாவட்டச் செயலாளர்), கிழக்கு பகுதி: பிகேசேகர்பாபு, எம்எல்ஏ, (சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர்), அவனியாபுரம் மேற்கு பகுதி: இபெ. செந்தில்குமார்,

எம்எல்ஏ (திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர்) மற்றும் கேகேஎஸ்எஸ்ஆர். ராமச்சந்திரன் எம்எல்ஏ (விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளர்), துரை. சந்திரசேகர் எம்எல்ஏ (தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளர்), கும்மிடிப்பூண்டி கிவேணு (திருவள்ளூர் வடக்கு மாவட்டச் செயலாளர்), எஸ்எஸ். பழனி மாணிக்கம், ஜெஅன்பழகன் எம்எல்ஏ (சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர்), பூண்டி கேகலைவாணன் (திருவாரூர் மாவட்டச் செயலாளர்), கௌதமன் (நாகை தெற்கு மாவட்டப் பொறுப்பாளர்), கம்பம் நாராமகிருஷ்ணன் (தேனி மாவட்டப் பொறுப்பாளர்), காமுத்துராமலிங்கம் (ராமநாதபுரம் மாவட்டப் பொறுப்பாளர்), ஆவுடி சாமுநாசர் (திருவள்ளூர் தெற்கு மாவட்டச் செயலாளர்), நிவேதா எம்முருகன் (நாகை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர்), கேஎஸ். மஸ்தான் எம்எல்ஏ, (விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர்), எம்எல்ஏக்கள் சாக்கோட்டை கஅன்பழகன், எம்ஏ.ஆண்டி அம்பலம், பிஎன்பிஇன்பசேகரன், ஜெஎல்ஈஸ்வரப்பன், கோவிசெழியன், பரங்கநாதன், டாக்டர் மாசிலாமணி, பதாயகம்கவி, கேஎஸ்ரவிச்சந்திரன், சீத்தாபதி சொக்கலிங்கம், சிவவீமெய்யநாதன், திருத்துறைப்பூண்டி ஆடலரசன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஓட்டப்பிடாரம்தொகுதி: ஓட்டப்பிடாரம்சட்டப்பேரவைத் தொகுதி பொறுப்பாளர்களாக கேஎன்நேரு எம்எல்ஏ, (திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர்), அனிதா ராதாகிருஷ்ணன் (தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர்) ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். தூத்துக்குடி ஒன்றியம்: கனிமொழி, எம்பி (மாநில மகளிர் அணிச் செயலாளர்), கருங்குளம் வடக்கு ஒன்றியம்: எஸ்ஆஸ்டின், எம்எல்ஏ. (மா நில சிறுபான்மை நலஉரிமை பிரிவு துணை தலைவர்), அன்னை இந்திரா நகர் பகுதி: பெகீதா ஜீவன், எம்எல்ஏ (தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர்),ஒட்டப்பிடாரம் மேற்கு ஒன்றியம்: இரா. ஆவுடையப்பன் (திருநெல்வேலி கிழக்கு மாவட்டச் செயலாளர்) ஸ்பிக்நகர் பகுதி:மாசுப்பிரமணியன்,எம்எல்ஏ (சென்னைதெற்கு மாவட்டச் செயலாளர்), திருவைகுண்டம் மேற்கு ஒன்றியம்: என்சுரேஷ்ராஜன் எம்எல்ஏ (கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர்) மற்றும் எஸ்ரகுபதி எம்எல்ஏ,

(புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர்). மூஅப்துல் வகாப் (திருநெல்வேலி மத்திய மாவட்டச் செயலாளர்), பொசிவபத்மநாதன், (திருநெல்வேலி மேற்கு மாவட்டப் பொறுப்பாளர்), சிவிவெகணேசன் எம்எல்ஏ. (கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர்). மனோதங்கராஜ், எம்எல்ஏ, (கன்னியாகுமரி மேற்கு மாவட்டச் செயலாளர்), வீகருப்பசாமிபாண்டியன் இகருணாநிதி எம்எல்ஏ, கேஎஸ். ராதாகிருஷ்ணன் (செய்தி தொடர்பு செயலாளர்), டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா (மருத்துவர் அணி தலைவர்), ஏகேஎஸ்விஜயன் (மாநில விவசாய அணிச் செயலாளர்) நதியாகராஜன் (திருச்சி வடக்கு மாவட்டச் செயலாளர்), மூஅப்பாவு(தணிக்கைக்குழுஉறுப்பினர்),எம்எல்ஏக்கள்டிபிஎம். மைதீன்கான், ஏஎல்எஸ்லெட்சுமணன், சபாராஜேந்திரன், ஏசவுந்தரபாண்டியன்,செஸ்டாலின்குமார் மற்றும் அய்யாதுரை பாண்டியன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

என்னை பதவி நீக்கம் செய்ய முடியாது: டிரம்ப் உறுதி

அமெரிக்காவில் கடந்த 2016ம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, குடியரசு கட்சி வேட்பாளராக களம் இறங்கிய டொனால்டு டிரம்ப்பை வெற்றி பெறவைப்பதற்காக

அதன்பேரில், அமெரிக்காவின் மத்திய புலனாய்வு குழுவின் முன்னாள் இயக்குனர் ராபர்ட் முல்லர் தலைமையில் சிறப்பு விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. சுமார் 2 ஆண்டு காலம் தீவிர விசாரணைக்கு பிறகு முல்லர் தலைமையிலான விசாரணைக்குழு தன்னுடைய அறிக்கையை, அமெரிக்க அரசு நீதித்துறையிடமும், அட்டார்னி ஜெனரல் வில்லியம் பாரிடமும் தாக்கல் செய்தது.

அதன் பின்னர் அட்டார்னி ஜெனரல் வில்லியம் பார், அந்த அறிக்கையில் உள்ள முக்கிய அம்சங்களை மேற்கோள்காட்டி, ஜனாதிபதி டிரம்ப் குற்றமற்றவர் என நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். ஆனால் ஜனநாயக கட்சியினரோ, முல்லரின் அறிக்கையை முழுமையாக வெளியிடாமல் டிரம்பை குற்றமற்றவர் என கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றனர்.

எனவே விசாரணை குழுவின் முழுமையான அறிக்கையை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய அவர்கள் கோரிக்கை வைத்தனர். அதன்படி 448 பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கை கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த அறிக்கையில், "2016ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போது, தற்போதைய ஜனாதிபதி டிரம்போ அவரது பிரசார குழுவை சேர்ந்தவர்களோ ரஷியாவுடன் சேர்ந்து சதி செய்தார்கள் என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை" என தெரிவிக்கப்பட்டது.

மேலும், விசாரணை குழுவில் இருந்து முல்லரை நீக்க வெள்ளை மாளிகை வக்கீலுக்கு டிரம்ப் உத்தரவிட்டதாகவும், ஆனால் அதில் உடன்பாடு இல்லாததால் வெள்ளை மாளிகை வக்கீல் பதவி விலகியதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதே சமயம், "நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் உள்ள உறுப்பினர்கள் அனைவரும், அரசியல் பேதங்களை புறம் தள்ளிவிட்டு, அரசியலமைப்பு கடமையை ஆற்றவேண்டும். அதாவது தவறான முன் உதாரணமாக இருக்கும் ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்வதற்கு அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டும்" என எலிசபெத் வாரன் உள்ளிட்ட ஜனநாயக கட்சியினர் வலியுறுத்தினர்.

இந்த நிலையில் தன்னை பதவி நீக்கம் செய்யக்கோரும் ஜனநாயக கட்சியினரின் கோரிக்கைக்கு டிரம்ப் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் டுவிட்டரில் கூறியிருப்பதாவது:

மிகப்பெரிய குற்றங்கள் மற்றும் தவறான நடவடிக்கைகளுக்காக மட்டுமே ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்ய கோர முடியும். நான் எந்த குற்றமும் செய்யவில்லை. எனவே என்னை பதவி நீக்கம் செய்ய முடியாது.

குடியரசு கட்சி ஜனாதிபதி குற்றவாளி அல்ல. ஜனநாயக கட்சியினர்தான் குற்றவாளி. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

வடகொரியா அதிபருடன் ரஷிய அதிபர் புதின் 25ம் தேதி பேச்சுவார்த்தை

அணு ஆயுதம் மற்றும் ஏவுகணை சோதனைகள் மூலம் உலக நாடுகளை வடகொரியா அச்சுறுத்தி வந்தது. இதனால் வடகொரியா சர்வதேச நாடுகளின் எதிர்ப்பை சம்பாதித்தது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் வடகொரிய தலைவர் கிம் ஜாங் அன்னும், அமெரிக்க ஜனாதிபதி டிரம்பும் சந்தித்து பேசிய பிறகு, இந்த சூழல் மாறியது. வடகொரியா அணு ஆயுத சோதனைகளை நிறுத்தி, அமைதிக்கு திரும்பியதை சர்வதேச நாடுகள் வரவேற்றன.

டிரம்ப்கிம் ஜாங் அன்னின் 2வது சந்திப்பு தோல்வியில் முடிந்ததால் வடகொரியா மீண்டும் அணு ஆயுத சோதனைக்கு திரும்பிவிடுமோ என்கிற அச்சம் எழுந்துள்ளது. இதுகுறித்து பேசி தீர்வுகாண 3வது சந்திப்புக்கு இருநாட்டு தலைவர்களும் பரஸ்பர விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, வரலாற்றில் முதல்முறையாக ரஷிய அதிபர் புதினும், வடகொரிய தலைவர் கிம் ஜாங் அன்னும் சந்தித்து பேச இருப்பதாக தகவல் வெளியானது.

இந்நிலையில், ரஷிய அதிபர் புதினும், வடகொரிய தலைவர் கிம் ஜாங் அன்னும் 25ம் தேதி ரஷியாவில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர் என கிரெம்ளின் மாளிகை தெரிவித்துள்ளது.

ஜப்பான்: உள்ளாட்சித் தேர்தலில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் முதல்முறையாக வெற்றி

ஜப்பானில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் எடோகாவா வார்டில், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த புராணிக் யோகேந்திரா வெற்றி பெற்றார். ஜப்பானில் தேர்தலில் வெற்றி பெற்ற முதல் இந்தியர் இவர்தான்.

ஜப்பானில் செயல்பட்டுவரும் "ஆஸாஹி சிம்பன்' செய்தி வலைதளத்தில் வெளியான செய்தியில் கூறப்பட் டுள்ளதாவது:

ஜப்பானில் கடந்த 21ஆம் தேதி உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றது. மொத்தம், 2,26,561 வாக்குகள் பதிவானது.

எடோகாவா வார்டு தேர்தலில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த புராணிக் யோகேந்திரா 6,447 வாக்குகளை பெற்று வெற்றி பெற்றார். ஜப்பானில் உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற முதலாவது இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் இவரே என்று அந்த இணையதளத்தில் வெளியான செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பு ஜனநாயகக் கட்சியின் ஆதரவைப் பெற்ற புராணிக் யோகேந்திரா கூறுகையில், "ஜப்பானியர்களுக்கும், வெளிநாட்டினருக்கும் பாலமாகத் திகழ்வேன்' என்றார்.

ஜப்பானில் சுமார் 34,000 இந்தியர்கள் வசித்து வருகின்றனர். எடோகாவா வார்டுக்கு உள்பட்ட பகுதியில் சீனா மற்றும் கொரியாவைச் சேர்ந்தவர்களும் அதிகம் பேர் வசித்து வருகின்றனர். 1997ஆம் ஆண்டு ஜப்பானுக்கு முதல் முறையாக வந்தார் யோகேந்திரா. அப்போது அவர் இந்தியாவில் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தார். அதனால், 2 ஆண்டுகள் இந்தியாவில் இருந்தார்.

பின்னர், பொறியாளராக ஜப்பானில் பணிபுரிய மீண்டும் வந்தார். பின்னர், வங்கியிலும், வேறு சில நிறுவனங்களிலும் அவர் பணிபுரிந்தார். கடந்த 2005ஆம் ஆண்டு முதல் எடோகாவாவில் வசித்து வருகிறார்.

பிரெக்ஸிற் ஒப்பந்தம் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படாது: ஐரோப்பிய ஆணையம்

ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் பிரித்தானியாவுக்கு இடையில் கடந்த வருடம் ஒப்புக்கொள்ளப்பட்ட பிரெக்ஸிற் ஒப்பந்தம் எக்காரணத்தைக் கொண்டும் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படாது என ஐரோப்பிய ஆணையம் மீண்டு உறுதியாக தெரிவித்துள்ளது.

பிரெக்ஸிற் ஒப்பந்தத்தில் காணப்படும் முக்கிய அம்சமான ஐரிஷ் எல்லைக் கொள்கைக்கு மாற்று ஏற்பாடுகளை பரிசீலனை செய்யுமாறு பிரதமர் தெரேசா மே தனது உதவியாளர்களைக் கேட்டுக்கொண்டுள்ளதாக செய்தியை வெளியாகியுள்ளதையடுத்தே ஐரோப்பிய ஆணையம் இக்கருத்தை வெளியிட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் சிறந்ததாக இருப்பதால் அதை மறுபரிசீலனை செய்யமுடியாது என ஐரோப்பிய ஆணையத்தின் தலைமை செய்தித்தொடர்பாளர் மினா ஆண்ட்ரீவா தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஆணையத் தலைவர் ஜீன்க்ளூட் ஜுங்கரின் கருத்துக்களை மேற்கோள்காட்டியே மினா ஆண்ட்ரீவா தனது கருத்தை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சவூதி அரேபியாவில் 37 பயங்கரவாதிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றம்!

சவூதி அரேபியாவில் பயங்கரவாத வழக்குகளில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 37 பேருக்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) தண்டனை நிறைவேற்றப்பட்டது.

அந்த வகையில் இந்த 37 பேருக்கும் தலைகளை வெட்டி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

சவூதி அரேபியா நாட்டில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, போதை பொருள் கடத்தல் மற்றும் பயங்கரவாத குற்றங்களில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை வழங்கப்படுகிறது.

இந்நிலையில், நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் பயங்கரவாத சித்தாந்தத்தை பரப்பியும், பயங்கரவாதிகளாக செயற்பட்டும் வந்த உள்நாட்டினர் 37 பேருக்கு நீதிமன்ற தீர்ப்பின்படி இன்று தலைகளை வெட்டி, மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

உகான்டா புயெண்டே மற்றும் கமுலி மழை, வெள்ளத்துக்கு 18 பேர் பலி

உகான்டா நாட்டின் கிழக்கில் உள்ள புயெண்டே மற்றும் கமுலி மாநிலங்களில் நேற்றிரவு கனமழை கொட்டித் தீர்த்தது. இடைவிடாது பெய்த பெருமழையினால் கியோலா ஏரியை ஒட்டி தாழ்வான இடங்களில் உள்ள குடியிருப்பு பகுதிகளை வெள்ளம் சூழ்ந்தது.

வெள்ளப் பெருக்கினால் பல வீடுகளின் சுவர்கள் இடிந்து விழுந்தன. சிலர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர்.

இந்நிலையில், மழை மற்றும் வெள்ளம்சார்ந்த விபத்துகளில் புயெண்டே மாநிலத்தில் 13 பேரும் கமுலி மாநிலத்தில் 5 பேரும் உயிரிழந்ததாக உகாண்டா ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. மேலும், காயமடைந்த சுமார் 100 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் ஏழைகள், பழங்குடியினருக்கு அநீதி

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி குற்றச்சாட்டு

துங்கர்பூர், ஏப்.24-

கடந்த 5 ஆண்டுகால பாஜ ஆட்சியில் ஏழைகள், பழங்குடியினத்தவர் உள்ளிட்ட நலிந்த பிரிவினருக்கு பாஜ அநீதி இழைத்துள்ளது என்று காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.

ராஜஸ்தானில் வரும் 29ம் தேதி மற்றும் மே 6ம் தேதி என 2 கட்டமாக மக்களவை தேர்தல் நடைபெற உள்ளது. இதையொட்டி அங்கு காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார். பழங்குடியின மக்கள் அதிகம் வசிக்கும் துங்கர்பூர் தொகுதியில் உள்ள பனேஸ்வர்தாமில் உள்ள சிவன் கோயிலில் ராகுல் காந்தி நேற்று வழிபாடு நடத்தினார்.

பின்னர் அங்கு நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் ராகுல் பேசியதாவது: கடந்த 5 ஆண்டு கால மத்திய பாஜ ஆட்சியில் பழங்குடியினருக்கு பிரதமர் மோடி அநீதி இழைத்துள்ளார். தேர்தல் வாக்குறுதி எதையும் நிறைவேற்றாத பிரதமர் 15 தொழிலதிபர்களுக்கு மட்டும் ஆட்சி நடத்தினார்.

எனவே அடுத்த 5 ஆண்டுக்கு நீதியை நிலை நாட்ட விரும்புகிறேன். வங்கிக் கணக்கில் 15 லட்சம் போடப் படும், ஒவ்வொரு ஆண்டும் 2 கோடி வேலை வாய்ப்புகள் வழங்கப்படும், விவசாயிகள் விளைவித்த பயிர்களுக்கு சிறந்த விலை வழங்கப்படும் என உறுதியளித்த மோடி, அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வில்லை. உங்களிடம் இருந்து கடந்த 5 ஆண்டுகளில் மோடி அரசால் வழிப்பறி செய்யப்பட்டதை விட அதிகமாக திருப்பி தர நடவடிக்கை எடுப்பேன். அவர்கள் சர்ஜிக்கல் ஸ்டிரைக் பற்றி தான் பேசுகிறார்கள்.

நான் ஏழைகளின் வறுமையை ஒழிக்க நடவடிக்கை எடுப்பேன். மனதில் பட்டதை எல்லாம் நான்பேசுவதாகபிரதமர்மோடி என் மீது குற்றம்சாட்டுகிறார். உண்மையில் பொய் சொல்வது பிரதமர் தான். ஏனெனில் ஒவ்வொரு ஆண்டும் 2 கோடி வேலைவாய்ப்புகள் தரப்படும், வங்கி கணக்கில் 15 லட்சம் தரப்படும் என கூறியது பொய்யில்லையா?. காங்கிரஸ் அதிகாரத்துக்கு வந்தால் நியாய் திட்டத்தின் மூலம் ஏழைகள் வங்கி கணக்கில் ஆண்டுக்கு 72,000 செலுத்துவேன், ஒரு ஆண்டில் 22 லட்சம் அரசு வேலை வழங்கப்படும்.

இதுவரை எந்த நாடும் செய்யாத திட்டமான, ஏழைகள் வங்கிக் கணக்கில் பணம் செலுத்துவதை நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நிச்சயம் நிறைவேற்றுவோம். அனில் அம்பானி போன்றவர்கள், வங்கிக் கணக்கில் லட்சம் கோடி அளவில் மோடி பணம் செலுத்துகிறார்.அந்தகணக்கில் இருந்து எடுத்து ஏழைகள் கணக்கில் செலுத்துவேன். பணமதிப்பிழப்பு மற்றும் ஜிஎஸ்டியால் பல்வேறு இன்னல்களை நீங்கள் அனுபவித்துள்ளீர்கள். ஆனால் நாங்கள் ராஜஸ்தான், சட்டீஸ்கர், மத்திய பிரதேசத்தில் ஆட்சிக்கு வந்த 10 நாட்களில் விவசாய கடன்களை தள்ளுபடி செய்துள்ளோம். கடனை திருப்பி செலுத்தாத விவசாயிகள் சிறையில் அடைக்கப் படுகிறார்கள். ஆனால் பணக்காரர்கள் வாங்கிய கடனை திருப்பி செலுத்தாவிட்டால் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப் படுவதில்லை. இவ்வாறு அவர் பேசினார்.

இதற்கிடையே, மக்களவை 3ம் கட்ட வாக்குப் பதிவை யொட்டி ராகுல் வாக்காளர்களுக்கு வெளியிட்ட டிவிட்டர் பதிவில், “நாடு முழுவதும் லட்சக் கணக்கான இளைஞர்கள் முதல் முறையாக வாக்களிக்க உள்ளார்கள். அவர்கள் நியாய் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்து வருகிறார்கள்” என்று கூறியுள்ளார்.

‘காவலாளி திருடன்’ கோஷம்: ராகுல்காந்தி நேற்று மபியின் சிகோராவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசினார். அப்போது ‘காவலாளியே திருடன்’ என்ற வாசகத்தை முழங்கினார். அப்போது, இது அழகான வாசகம் என்றபடியே காவலாளியே.. என பேசியபடி நிறுத்தினார். அப்போது பொதுமக்கள் கோரஷாக திருடன்’ என்றனர். தொடர்ந்து பேசிய ராகுல் ‘நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பிரான்சில் அல்ல, இந்தியாவிலேயே ரபேல் விமானங்கள் தயாரிக்கப்படும்’ என்றார்.

ஈரானிலிருந்து கச்சா எண்ணெய் வாங்க அமெரிக்கா விதித்த தடை ஒரு வாரத்தில் அமல்

பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு வருமா?

புதுடெல்லி, ஏப்.24-

அமெரிக்க தடையை எதிர்கொள்ள இந்தியா தயாராகி விட்டது. ‘ஈரான் எண்ணெய் சப்ளை இழப்பை ஈடுகட்ட மற்ற நாடுகளிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவது என்று முடிவு செய்துள்ளது.

அணுஆயுத தடை ஒப்பந்தத்தில் இருந்து ஈரான் விலகி விட்டது. அணு ஆயுத பரவல் தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு அளிக்காத ஈரான் மீது அமெரிக்கா பொருளாதார தடை விதித்து வருகிறது. ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்க, எல்லா நாடுகளுக்கும் அமெரிக்கா போட்டுள்ள தடை ஒரு வாரத்தில் அமலாக உள்ளது.

ஈரானிடம் இருந்து அதிக அளவில் கச்சா எண்ணெய் வாங்கும் நாடுகளி 3வது நாடு இந்தியா. சீனாவுக்கு அடுத்து அதிக அளவில் வாங்கும் நாடு. கடந்த ஆறு மாதத்துக்கு முன் தடை அறிவிப்பை அமெரிக்கா வெளியிட்டது. இருப்பினும் இந்தியா, சீனா உள்ளிட்ட 8 நாடுகளுக்கு மட்டும் இந்த தடையை தளர்த்தியது அமெரிக்கா. இந்த சலுகை இம்மாதத்துடன் முடிகிறது.

வரும் 1ம் தேதியில் இருந்து ஈரானிடம் யாரும் கச்சா எண்ணெய் வாங்கக்கூடாது என்று கூறி விட்டது. இதற்கு இந்தியாவும் ஒப்புதல் அளித்து விட்டது. ஈரான் சப்ளை தட்டுப்பாட்டால், பெட்ரோல், டீசல் வினியோகத்தில் பாதிப்பு வருமா என்ற அச்சம் காணப்படுகிறது.

இதுகுறித்து மத்திய பெட்ரோலிய துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் ட்விட்டரில் கூறியிருப்பதாவது:

ஈரானில் இருந்து கச்சா எண்ணெய் சப்ளை குறைந்தாலும், விரைவில் நின்றாலும் எந்த பாதிப்பும் இந்தியாவுக்கு ஏற்படாது. எண்ணெய் வள நாடுகளின் அமைப்பில் உள்ள வேறு சில நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் அதிக அளவில் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

குறிப்பாக, அமெரிக்கா, மெக்சிகோ ஆகிய நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் வாங்க இந்தியா முடிவு செய்துள்ளது.

அதனால் வரும் 1-ம் தேதியில் இருந்து ஈரான் சப்ளை இல்லாவிட்டாலு ம், எந்த பாதிப்பும் ஏற்படாது என்று தெரிகிறது.

நீலகிரி மாவட்டம் கூடலூரில் மனிதநேய பணிகள்

கூடலூர், ஏப் 24-

கேரள மாநிலம் தேர்தல் பிரச்சாரம் பணிகளை முடித்து மாநில பொருளாளர் ஷாஜஹான் கூடலூர் வழியாக வருகை தந்த போது இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நீலகிரி மாவட்ட தலைவரும், கூடலூர் தாலுகா முஸ்லிம் காப்பகத்தின் தலைவருமான கேபி. முஹம்மது ஹாஜியை சந்தித்தார்.

தந்தையை இழந்த ஆண் மற்றும் பெண் குழந்தைகளுக்கு இலவசமாக இருப்பிடம், உணவு , மார்க்க கல்வி மற்றும் உலக கல்வி மற்றும் திருமண உதவி ஆகிய அனைத்தும் கடந்த 45 ஆண்டுகளுக்கு மேலாக செய்து வருகின்றனர்.

இதன் சார்பாக ஜிடிஎம்ஓ பொது மருத்துவமனை நடைபெற்று வருகிறது. மற்றும் கிட்னி பாதிக்கப்பட்டு டயாலிசிஸ் செய்யும் நிலையில் உள்ள நோயாளிகளுக்குமூ டயாலிசிஸ் சென்டர் அமைக்கும் பணி நடைபெற்று 70 சதவீதம் பணிகள் முடிவடைந்து உள்ளது.

மேலும் பானக்காடு ஷிகாப் தங்கள் நினைவு அரபிக் கல்லூரி எழை எளிய மாணவர்கள் இலவசமாக மார்க்க கல்வி பயில அருமையான சுற்றுச்சூழலில் அரபிக் கல்லூரியும் நடத்தி வருகின்றனர்.

மனித நேய பணிகள் செய்து வரும் நிறுவனர், பணியாளர்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல இறைவனை எல்லா வளமும் நலமும் வழங்கிட பிரார்த்திக்கிறேன்.

இச்சந்திப்பில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நீலகிரி மாவட்ட துணை செயலாளர் அப்துல் நாசர், மாநில ஊடகப்பிரிவு ஒருங்கிணைப்பாளர் ஆடுதுறை ஜமால், திருநெல்வேலி மண்டல இளைஞரணி அமைப் பாளர் பாட்டபத்து கடாபி, இராமநாதபுரம் மாவட்ட செயலாளர் பைசல், துணைத் தலைவர் சாதுல்லா கான், நகர செய லாளர் கதியத்துல்லா, சுலை மான் சேட், அசாருதீன், இளைஞரணி முஸ்தாக், ஷாஜி, ஃபாத், அப்துல் ஸலாம் ஆகியோர் உடன் இருந்தனர்

மணிச்சுடர் செய்தி ஆசிரியர் ஏ.கே. முஹம்மது காசிம் மகனும், ஆலிம் முஹம்மது சாலிஹ் பொறியியல் கல்லூரியின் முன்னாள் மாணவரும் அமெரிக்காவின் ஆரேகான் மாநிலத்தில் டாட்டா கன்சல்டன்ஸி நிறுவனத்தில் கணினி ஆலோசகராக பணிபுரியம் எம். காஜா மொய்தீன் மரியாதை நிமர்த்தமாக ஆலிம் முஹம்மது சாலிஹ் கல்லூரியின் செயலாளர் ஷேகு ஜமாலுதீனை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

மத்திய அரசு தொடர்ந்து மவுனம்

கடன் பாக்கியில் சிக்கித் தவிக்கும் ஜெட் ஏர்வேஸ் கதி என்னவாகும்?

புதுடெல்லி, ஏப்.24-

கடன் பாக்கியில் சிக்கித் தவிக்கும் ஜெட் ஏர்வேஸ் கதி என்ன ஆகும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஜெட் ஏர்வேஸ் திவாலாவதை தடுக்க மத்திய அரசு எந்த முயற்சியும் செய்யவில்லை.

இந்நிலையில் ஜெட் கம்பெனியில் இருந்து பைலட்கள், ஊழியர்கள் பலரும் வெளியேறிய வண்ணம் உள்ளனர். யாரும் வெளியேற வேண்டாம்; கண்டிப்பாக மத்திய அமைச்சர் ஜெட்லி உதவுவார் என்று நிர்வாகம் கூறினாலும், சமீபத்தில் தொடர்ந்து அதிக அளவில் பைலட்கள் வெளியேறி வருவது தெரியவந்துள்ளது. பைலட்கள் வெளியேறி விட்டால், கணிசமான அதிகாரிகள் ஊழியர்கள் விலகி விட்டால் கம்பெனியை மீண்டும் புனரமைப்பு செய்வது கடினம். அதனால் யாரும் வெளியேற வேண்டாம் என்று கேட்டு கொண்டுள்ளது நிர்வாகம். ஆனால், பைலட்கள் சங்கம் நேற்று வெளியிட்ட அறிக்கையில், ஜெட் நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது; இருந்தாலும், வாழ்வாதாரம் பயம் காரணமாக பல பைலட்கள் விலகி வருகின்றனர்.

இதுவரை ஜெட் கம்பெனியில் இருந்து 410 பைலட்கள் வெளியேறி விட்டனர். மீதம் உள்ள 1527 பைலட்களில் பலரும், இந்தியா மற்றும் வெளிநாடுகளில் நேர் காணலில் பங்கேற்று விட்டு, வேலை நியமன ஆர்டருக்காக காத்திருக்கின்றனர்.

எங்களை பொறுத்தவரை, நாங்களும் மற்ற விமான நிறுனங்களுடன் பேசி வருகிறோம். குறிப்பிட்ட காலத்துக்காவது லீசில் ஜெட் கம்பெனியை ஏற்று நடத்தினால், அதற்குள் அரசு உதவியுடன் புதிய நிர்வாகத்தின் கையில் ஒப்படைக்கலாம். ஜெட் கம்பெனியை திவால் ஆக விடக்கூடாது என்று கேட்டு வருகிறோம்’ என்று சங்க நிர்வாகிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜெட் விஷயத்தில் மத்திய அரசு தொடர்ந்து மவுனம் சாதித்து வருகிறது. குறிப்பிடத்தக்க அளவில் யாரும் வாய்திறக்கவில்லை. பல ஆயிரம் பேர் வேலை பறிபோகும் அபாயம் ஏற்பட்டு, திவால் ஆகி விடும் என்ற நிலைக்கு தள்ளப்படுமா என்ற அச்சம் அதிகரித்து வருகிறது.

மத்திய அரசு இதுவரை பெரிதாக எந்த பதிலும் சொல்லவில்லை. ஆனால், தேர்தல் முடிவுக்கு பின் தான் எந்த முடியும் எடுக்க முடியும் என்று கைவிரித்து விட்டது. மே மாதத்தில் ஜெட் கதிக்கு ஒரு வழி பிறக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜெட் கடன் பாக்கி வைத்துள்ள ஸ்டேட் பாங்க், விமான கம்பெனியின் கடன் பாக்கிக்கு தீர்வு காண முயற்சித்து வருகிறது. இப்போது நல்ல நிலையில் இயங்கும் இந்திய நிறுவனங்களுடன் பேசி வருகிறது.

மே 4-ந் தேதி அக்னி நட்சத்திரம் தொடங்கி 29-ந் தேதி வரை நீடிக்கும்

சென்னை, ஏப்.24-

அக்னி நட்சத்திரம் என்னும் கத்திரி வெயில் மே 4ம் தேதி தொடங்கி மே 29ம் தேதி வரை நீடிக்கும்.

சூரியனுக்கு அருகில் வான்வெளியில் மேஷம் என்னும் நட்சத்திர மண்டலப் பகுதிக்கு வருவதையே வெப்பம் மிகுந்த காலமாக கூறப்படுகிறது. இந்தியாவில் இந்த காலம் அக்னி நட்சத்திரம் அல்லது கத்திரி வெயில் காலம் என்று அழைக்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் மே 4ம் தேதி தொடங்கி குறைந்த பட்சம் 21 நாட்கள் அதிகபட்சம் 28 நாட்கள் வரை இருக்கும். கடந்த 2018ம் ஆண்டு கத்திரி வெயில் காலம் என்பது 28 நாட்கள் நீடித்தது. இந்த ஆண்டு மே 4ம் தேதி தொடங்கி 29ம் தேதி வரை அதாவது 26 நாட்கள் கத்திரி வெயில் காலம் நீடிக்கிறது.

கத்திரி வெயில் காலத்தின் தொடக்கத்தில் முதல் 7 நாட்கள் வெயிலின் தாக்கம் அதிகரித்துக் கொண்டே சென்று 21வது நாளில் வெயில் உச்சத்தை தொடும். அதற்கு பிறகு எப்படி வெயில் அதிகரித்ததோ அதே நிலையில் படிப்படியாக குறையத் தொடங்கும். கடந்த 2018ம் ஆண்டில் இந்த கத்திரி வெயில் காலத்தில் வெயிலின் தாக்கம் தொடக்கத்தில் 100 டிகிரியில் தொடங்கி 108 டிகிரி வரை சென்றது.

குறிப்பாக திருத்தணி, வேலூர், கரூர் மாவட்டங்களில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இந்த ஆண்டைப் பொறுத்த வரையில் கத்திரி தொடங்குவதற்கு முன்னதாகவே, தமிழகத்தில் அதிக பட்சமாக 107 டிகிரி வெயில் உச்சம் அடைந்துள்ளது. இதற்கிடையே, குமரிக்கடல் பகுதியில் ஏற்பட்ட வளி மண்டல காற்று சுழற்சி காரணமாக தென் மாவட்டங்களில் சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்து வருகிறது. இது சற்று வெப்பத்தை தணித்தாலும், கத்திரி வெயில் காலத்தில் இன்னும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுவாக இந்த கத்திரி வெயில் காலத்தில் உடலின் வெப்பம் அதிகரிக்கும். உடலின் வெப்ப இயக்கம் சரியாக இருக்காது.

வயிற்றுப் போக்கு, இதயம், நுரையீரல், சிறுநீரகம் போன்றவை பாதிக்கக்கூடும், காய்ச்சல், பொதுவான பலகீனம், உயர் ரத்த அழுத்தம் போன்ற பிரச்னைகள் ஏற்படும். வெயிலில் இருந்து பாதுகாப்பதுடன், வெயில் மற்றும் வெப்ப தாக்குதலில் தப்பிக்க வேண்டிய முயற்சிகளை எடுக்க வேண்டும் என்றும் டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

ரூ.17 லட்சம் செலவில் தமிழக போலீசாருக்கு 10 ஆயிரம் புதிய லத்திகள்

சென்னை, ஏப்ரல்.24-

காவல்துறையை நவீன மயமாக்கும் திட்டத்தின் கீழ் 10 ஆயிரம் லத்திகள், 26 ஆயிரம் விசில்கள் வாங்கப்படுகின்றன. ஒரு லத்தி ரூ165 விலையில் வாங்க நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

தமிழக போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடும் போது லத்திகள் பயன்படுத்துகிறார்கள். இதேபோல் விசிலும் பயன்படுத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில் லத்திகள், விசில்கள் பழையதாகி விட்டன. இதையடுத்து போலீசாருக்கு புதிதாக லத்திகள், விசில்கள் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

காவல்துறையை நவீன மயமாக்கும் திட்டத்தின் கீழ் 10 ஆயிரம் லத்திகள், 26 ஆயிரம் விசில்கள் வாங்கப்படுகின்றன.

ஒரு லத்தி ரூ165 விலையில் வாங்க நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. ரூ17 லட்சம் செலவில் 10 ஆயிரத்து 326 லத்திகள் வாங்கப்படுகிறது.

இதேபோல் ரூ13 லட்சம் செலவில் 26 ஆயிரத்து 196 விசில்கள் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

புதிய லத்திகள், விசில்கள் அனைத்தும் சட்டம்- ஒழுங்கு மற்றும் குற்றப் பிரிவு போலீசாருக்கு வழங்கப்படுகிறது.

இதுகுறித்து போலீஸ் அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

புதிதாக வாங்கப்படும் லத்தி மற்றும் விசில்கள் மாநிலம் முழுவதும் உள்ள போலீசாருக்கு ஜூலை மாதம் முதல் வழங்கப்படும்.

பொதுவாக பணியின் போது விசில்கள் பயன்படுத்துவது இல்லை. செல்போன்கள் வந்த பிறகு விசில் பயன்பாடு குறைந்து விட்டது. செல்போன் மூலம் சக போலீசாரை விரைவில் தொடர்பு கொண்டு வருகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

‘மணிச்சுடர்’ சந்தாதாரராகி விட்டீர்களா?
ஆண்டுச் சந்தா ரூ. 1000/–
ஆறு மாதம் ரூ. 500/–

மாலேகான் குண்டு வெடிப்பில் குற்றம் சாட்டப்பட்ட

பிரக்யாவை வேட்பாளராக நிறுத்தியதன் மூலம் பிரிவினையை உண்டாக்குகிறது பா.ஜ.க.

ம.பி முதல்வர் கமல்நாத் குற்றச்சாட்டு

போபால், ஏப்.24-

மத்தியப் பிரதேச மாநிலம் போபால் மக்களவைத் தொகுதியின் காங்கிரஸ் வேட்பாளராக முன்னாள் முதல்வர் திக்விஜய் சிங் களமிறக் கப்பட்டுள்ளார். இந்நிலை யில், கடந்த 2008ம் ஆண்டு நடந்த மாலேகான் குண்டு வெடிப்பு சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்டு தற்போது ஜாமீனில் வெளியே வந்துள்ள பிரக்யா தாகூரை, போபால் தொகுதி வேட்பாளராக பாஜ அறிவித்தது.இதையடுத்து கடந்த சில தினங்களுக்கு முன்னர் அவர் வேட்பு மனுத்தாக்கல் செய்தார்.

இதுதொடர்பாக முதல்வர் கமல்நாத் கூறியபோது, “மக்களிடையே பிரிவினையை உண்டாக்குவதையே பாஜ செய்து வருகிறது. இதை மக்கள் அறிந்திருக்கிறார்கள் என்பதை பாஜ இன்னும் உணரவில்லை. அவர்களுக்கு வேறு வேட்பாளர் கிடைக்கவில்லை. எனவே, அரசியல் பின்னணியும் எவ்வித பொதுச்சேவையிலும் தொடர்பில்லாத பிரக்யா தாகூர் வேட்பாளராக நிறுத்தப் பட்டுள்ளார்.

மதத்தின் பெயரால் மக்களிடையே பிரிவினை உண்டாக்கவே அவர் களமிறக்கப்பட்டுள்ளார். வேலை வாய்ப்பு, விவசாயிகள், சிறுவணிகர்கள் போன்ற எது குறித்தும் அவர்களால் பேச முடியாது. அதனால்தான், இது போன்று மக்களின் கவனத்தை திசை திருப்பும் வகையில், பிரிவினையை உண்டாக்க பாஜ முயற்சிக்கிறது” என்றார்.

மேட்டூர் அணையில் நீர் இருப்பு குறைந்துள்ளதால் 8-வது ஆண்டாக குறுவை சாகுபடி பொய்க்கும் நிலை

சென்னை, ஏப்.24-

மேட்டூர் அணையில், போதுமான நீர் இருப்பு இல்லாததால், எட்டாவது ஆண்டாக, குறுவை சாகுபடி பொய்க்கும் நிலை உருவாகியுள்ளது.சேலம் மாவட்டத்தில் உள்ள, மேட்டூர் அணை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட, டெல்டா மாவட்டங்களின் பாசன ஆதாரமாக விளங்குகிறது.இந்த அணையின் நீரை வைத்து, டெல்டாவில் குறுவை, சம்பா என, இரண்டு முக்கிய போகங்களில், நெல் சாகுபடி செய்யப் படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும், அணையில் இருந்து, ஜூன், 12ல், குறுவை பாசனத்திற்கு, நீர் திறக்க வேண்டும். சம்பா பருவ சாகுபடி முடிந்ததும், அடுத்தாண்டு ஜன, 28ல், அணையை மூட வேண்டும். அணையில் போதுமான நீர் இல்லாததால், ஏழு ஆண்டுகளாக, குறுவை பாசனத்திற்கு நீர் திறக்கப்படவில்லை.கர்நாடகாவில் கொட்டிய மழையால், 2018ல், மேட்டூர் அணைக்கு அதிகளவில் நீர்வரத்து கிடைத்தது. இதனால், இரண்டு முறை அணை நிரம்பியது. அணையில் இருந்து, பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்காக, தொடர்ச்சியாக நீர் திறக்கப்பட்டது

தற்போது, அணையில், 20 டிஎம்சி, நீர் உள்ளது. இந்த நீர், சென்னை, நாமக்கல், சேலம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களின், கோடை கால குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக உள்ளது. குறுவை சாகுபடிக்கு, 60 டிஎம்சி., நீர் தேவை. எனவே, எட்டாவது ஆண்டாக, இந் தாண்டும் ஜூன், 12ல், அணையை திறப்பதற்கான வாய்ப்பு குறைந் துள்ளது. இது, டெல்டா விவசாயிகள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

காங்கிரஸ் விரும்பினால் பிரதமர் மோடிக்கு எதிராக வாரணாசியில் போட்டியிடுவேன்

பிரியங்கா காந்தி பேச்சு

வாரணாசி, ஏப்.24-

காங்கிரஸ் கட்சியின் தலைமை விரும்பினால் பிரதமர் மோடிக்கு எதிராக வாரணாசி மக்களவை தொகுதியில்போட்டியிடுவேன் என கட்சியின் பொது செயலாளர் பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார்.

உபியில் உள்ள வாரணாசி மக்களவை தொகுதியில் பிரதமர் நரேந்திர மோடி போட்டியிடுகிறார். இங்கு 7வது கட்டமாக மே 19ம் தேதி தேர்தல் நடக்க இருக்கிறது. பிரதமர் மோடியை எதிர்த்து பிரியங்கா காந்தி போட்டியிட வேண்டும் என கட்சி நிர்வாகிகள் பலர் விருப்பம் தெரிவித்து வருகின்றனர். எனினும் இதுகுறித்து கட்சி மேலிடம் எந்த தகவலையும் இதுவரை வெளியிடவில்லை.

கட்சியின் தலைவர் ராகுல்காந்தி போட்டியிடும் அமேதி, தனது தாயார் போட்டியிடும் ரேபரேலி தொகுதிகளில் தொடர்ந்து பிரியங்கா காந்தி சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஆதரவு திரட்டி வருகின்றார். அமேதி தொகுதியில் இரண்டாவது நாளாக நேற்றும் பிரியங்கா பிரசாரம் மேற்கொண்டார். கவுரிகன்ச் பகுதியில் கட்சி தலைவர்களை சந்தித்து அவர் ஆலோசனை செய்தார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த பிரியங்கா, “நான் இதை தான் மீண்டும் மீண்டும் கூறுவேன். கட்சித் தலைமை என்னை என்ன செய்ய சொல்கிறதோ அதை தான் நான் செய்வேன். கட்சி விரும்பினால் வாரணாசியில் போட்டியிடுவேன். மக்கள் துன்புறுத்தப்பட்டதை உணர்கிறார்கள். அவர்கள் மாற்றத்தை விரும்புகின்றனர்” என்றார்.

அடிப்படை வசதிகள் இல்லாததை கண்டித்து மதுரை மத்திய சிறையில் போராட்டம்

25 கைதிகள் மீது வழக்குப்பதிவு

மதுரை, ஏப்ரல்24-

மதுரை மத்திய சிறையில் போராட்டம் நடத்திய 25 கைதிகள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

மதுரை மத்திய சிறையில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு தண்டனைப் பெற்ற கைதிகள், குற்றம்சாட்டப் பட்ட விசாரணைக் கைதிகள் என 1300-க்கும் மேற்பட்ட கைதிகள் உள்ளனர்.

இந்நிலையில், போதிய அடிப்படை வசதிகள் இல்லை, தரமான உணவு வழங்கப் படுவதில்லை, கடுமையாகச் சித்திரவதை செய்யப் படுவதாக குற்றம் சாட்டி, மதுரை மத்திய சிறைச்சாலையில் விசாரணைக் கைதிகள் 20-க்கும் மேற்பட்டவர்கள் சிறைச்சாலை வளாகக் கட்டடத்தின் மேல் ஏறி நின்று செவ்வாய்க்கிழமை திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து மேற்கு வட்டாட்சியர் கோபிதாஸ் செய்தியாளர்களிடம் கூறியது:

விசாரணைக் கைதிகளிடம் பேச்சுவார்த்தை நடத்திய பிறகு போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர். தற்போது எந்தவித பிரச்னையும் இன்றி சிறை வளாகம் அமைதியாக உள்ளது என்றார். முன்னதாக, கட்டடத்தின் மீது ஏறி போராட்டத்தில் ஈடுபட்ட விசாரணைக் கைதிகள் சாலையில் செய்திச் சேகரித்துக் கொண்டிருந்த செய்தியாளர்களிடம் கூறியது:

சிறைச்சாலையில் போதிய கழிப்பறை வசதிகள் இல்லை, தரமான உணவு வழங்கப் படுவதில்லை, இதுகுறித்து கேள்வி எழுப்பினால் காவலர் கள் கடுமையாக சித்திரவதை செய்வதாகத் தெரிவித்தனர்.

இந்நிலையில் மதுரை மத்திய சிறையில் போராட்டம் நடத்திய 25 கைதிகள் மீது வழக்குப்பதிவு செய்யப் பட்டுள்ளது.

அத்துமீறி போராட்டம் நடத்தியதால் கைதிகள் 25 பேர் மீது 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப் பட்டுள்ளது.

MANICHUDAR TAMIL DAILY Printed and Published by **K.A.M. MUHAMMED ABUBACKER M.L.A,** on behalf of Madras Media Private Limited at Madras Media Press from Quaide Millath Manzil, No. 36, Maraikayar Lebbai Street, Mannady, Chennai - 600 001. E-mail : manichudardaily@gmail.com | Ph : 044 - 2521 7890 / 2521 7786 **Editor : Prof. K.M. KADER MOHIDEEN, Ex. M.P.**